Regd No M. 4900.

16-பக்கங்கள்.

# குடி அரசு

ESTD. 1924

உள்நாடு வருட சந்தா ரூ. 7-0-0. தனிப்பிரதி 0-2-0.
ஓ. எம். சுப்பிரமணியன்
வெளிநாடு ,, ரூ. 9-0-0. ,, 0-2-6.

மாலை 22 } ஈரோடு 11-9-1948 சனிக்கிழமை } மலர் 1.



ஆம்! ஆற்றலின் பேருரு! நம் அடிமை வாழ்வு அகற்றும் அண்ணல்! திசையறியாது மயங்கிய திராவிடர்க்கு செம்மையான வழி காட்டி! **70**வது பிறந்த நாள் இந்த மாதம் **17**உ (**17-9-48**) வெள்ளிக்கிழமை. திராவிடர்களின் லட்சியம் சிறப்பான முறையில் கைகூட இந்த நாள் வாழ்க! வளர்க! எத்தகைய அடிமையும் இல்லாதொழித்திட, எம் நாட்டு மக்கள் இன்ப வாழ்வு வாழ, ஆற்றலின் பேருருவே! நீ வாழ்க! வாழ்க!!

## ஆற்றலின் உருவே வாழி!

★

1. சாதியால் கூறுபட்டுச்
சழக்கராய் வாழ்ந்து வந்த
ஆதமில் திராவிடரின்
அறியாமைதனை விரட்டி
பேதமை அரக்கன் தன்னைப்
பிழையற ஓட்டி விட்ட
கோதிலா ராமசாமிப்
பெரியோயே—வாழ்க! வாழ்க!!

2. அடிமையாய்க் கிடந்துநாளும்
அவதியால் இன்ன லுற்ற
கடமையை மறந்தமக்கள்
கல்வியை எய்த வேண்டி
உடமையைத் துச்சமென்று
உதறியே தள்ளி விட்டு
மிடிமையைப் போக்க நாளும்
மேன்மையாய் உழைத்தாய் வாழி!

3. உருத்தெரியா தொழிந்துவிட்ட
ஊமை வட மொழியைக்
கருத்தினிற் கொள்ளவேண்டிக்
கட்டாயம் ஆக்கி விட்டார்!
அறுத்தெறியச் சூழ்ச்சிகளை
அருந்தமிழைக் காக்க என
ஆர்த்திட்டாய் போர் முரசு
ஆற்றலின் உருவே!—வாழி!

"வ. பாலசுப்பிரமணியம்"

ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

சிறுவர் பகுதி.

# சூதாடி சுப்பன்

"தாதா"

கொலை, களவு, காமம், பொய், சூது, முதலான அய்ந்து கெட்ட குணங்களும், அய்ந்து உருவங்களாய்த் தோன்றிய அய்ந்து சகோதரர்கள், வட நாட்டில் எங்கோ ஓர் ஊரில் வசித்தனர். அவர்களில் மூத்தவன் பெயர் தான் சூதாடி சுப்பன் என்பது.

சூதாடிச் சுப்பனுக்குச் சூதாடுவதைத்தவிர வேறு தொழிலே தெரியாது. சூதாட்டத்திலோ தோல்வியும், கெலிப்பும் மாறி மாறி வரும். அதனால், சில சமயங்களில் சோற்றுக்கே திண்டாட்டம் வந்தாலும் வரும் என்ற பயம் சூதாடி சுப்பனுக்கு இருந்து வந்தது. அந்தச்சமயங்களில் தனக்கு உதவியாக இருக்கவேண்டும் என்பதற்காகவே, தனது சகோதரர்கள் நால்வரும் எப்போதும் தன்னை விட்டு பிரியாமலிருப்பதற்கு ஒரு ஏற்பாடு செய்து கொண்டான்.

அதுதான் அவன் கண்ட போலிப் பொதுவுடைமைத் தத்துவம். ஆமாம், தன் மனைவியைக் கூட அய்வருக்கும் பொதுவுடைமையாக வைத்து விட்டானென்றால், அதற்கு மேல் அவன் போலித் தத்துவத்தின் முட்டாள்தனத்தைப்பற்றி என்ன சொல்வது!

சூதாடிச்சுப்பனின் தம்பிகளில் ஒருவன் காமாந்தகாரக் குப்பன். இந்தக் குப்பனுக்குக் கோபால் என்ற ஒரு (டாபர்) மாமாவும் உண்டு. எங்கேயாவது அழகான பெண்களைக் கண்டு விட்டான்களோ அவ்வளவுதான்! உடனே இருவர் மூளைகளும் அபூர்வமாக வேலை செய்ய ஆரம்பித்து விடும். பிறகு அங்கெல்லாம் ஆபாசக் காட்சிகள்தான் நடக்கும்.

சூதாடிச்சுப்பனின் மற்றொரு தம்பியோ கொலைகாரக் குண்டன். சண்டை ஒன்றுதான் அவன் கொண்ட கொள்கை.

சூதாடிச் சுப்பனின் கடைசித் தம்பிகள் இருவரும் களவு, பொய், இவைகளில் கைதேர்ந்தவர்கள். சோதிடம் சொல்கிறேன் என்றும், ஆத்மார்த்தீகம் போதிக்கிறேன் என்றும் பித்தலாட்டங்கள் பண்ணிப் பிறர் பொருளைக் கவர்ந்து திரிந்தனர்.

ஒரு நாள் சூதாடிச் சுப்பன் ஒரு பெரிய சூதாட்டத்தில் சிக்சிக் கொண்டான். சூதாடிச் சூதாடி எல்லாச் சொத்துக்களையும் இழந்து விட்டான். கடைசியாக, அவனிடம் அய்வருக்கும் பொதுவான மனைவிதான் மீதியாக இருந்தாள்! அவளையும் சூதாட்டத்தில் பந்தயமாக வைத்துச்சூதாடித் தோற்றதினால் மானத்தையும் இழந்து விட்டான் சுப்பன்.

வெற்றி அடைந்தவர்கள், மானங்கெட்ட அந்த அய்ந்து சகோதரர்களையும் காரி உமிழ்ந்து, 'மக்கள் கண்களிலேயே நீங்கள் தென்படக் கூடாது' என்று கண்டிப்பாகக் கூறிக் காட்டுக்கு விரட்டி விட்டனர்.

'உன்னாலே நான் கெட்டேன், என்னாலே நீ கெட்டாய்' என்று ஒருவருக்கொருவர் நொந்து கொண்டு, அய்வரும் பல காலங்கள் காட்டில் மிருகங்களைப்போல் அலைந்து திரிந்தனர்.

பிறகு, தங்கள்மீது மக்களுக்கு ஏற்பட்ட வெறுப்பு மாறி இருக்கும், அல்லது மறந்திருக்கும் என்று எண்ணி, காமாந்தகாரக் குப்பனுடைய மாமா கோபால் மூலம், மக்களின் மன்னனுக்கு தூது அனுப்பி, அவர்கள் அய்வரையும் நகரத்தில் வாழ அனுமதிக்குமாறு வேண்டினர்.

மன்னனும் மனதிரங்கி, 'முன்பு அவர்கள் வசித்த நகரத்தைத் தவிர வேறு எங்கேயாவது குடிபுகுந்து நற்குணமுடையவர்களாய் வாழட்டும், பஞ்சமா பாதகங்களைச் செய்யாதிருக்கட்டும்' என்று கட்டளை யிட்டான்.

ஆனால், போக்கிரிப்பயலாகிய கோபால் அதற்கு இணங்காது, அய்வரும் முன் போலவே, முன்பு வாழ்ந்த நகரத்திலேயே வாழ அனுமதிக்கவேண்டும் என்று வீம்பு பேசினான். மன்னனுக்கு இரக்கம் நீங்கிக் கோபம் உண்டாயிற்று. அதனால், அக் கோபா[l] அவமானப்படுத்தப்பட்டுத் திரும்பினான்.

அவமானம் அடைந்த கோபா[லு]க்கு அளவு கடந்த ஆத்திர[ம்] பொங்கியது. உடனே, மற்றொ[ரு] நாட்டு அரசனிடம் சென்றான். சூழ்ச்சியாகப் பல அரசியல் பிரச்[சி]னைகளைக் கிளப்பி அவ்வரச[ன்]னுக்குச் சாம்ராச்சியப் பேரா[]சையை மூட்டினான். ஆசைக்கு அடிமையான அரசன், கோபால் விரித்த சூழ்ச்சி வலையில் வீழ்[ந்]தான். பஞ்சமா பாதகர்களாகிய அய்வருக்கும் படை பலம் கிடைத்தது.

படைபலம் இல்லாமலேசூழ்ச்சி முறை ஒன்றைக் கொண்டே, நாட்டு மக்களை ஆட்டிப்படைத்த நயவஞ்சகர்களுக்குப்படைபலமும் கிடைத்து விட்டால், சும்மா வி[டு]வார்களா? மேலும், கபடு, சூழ்ச்[சி]களில் கெட்டிக்காரனாகி[ய] கோபால், பல விதமான வஞ்சக[] பசப்பு வார்த்தைகளினாலே[] மன்னனின் சேனாதிபதிகளையும் முக்கியமான போர்வீரர்களையு[ம்] மயக்கிப், போரில் கலந்து கொள்ளாதவாறும் சதி செய்து முடித்[து] விட்டான்.

ஆகவே, கோபாலின் அய்ந்தா[ம்] படை வேலையாலும், கொடிய சூழ்ச்சி முறைகளாலும் கோ[ர] யுத்தத்தில் முடிவாகப் பஞ்சமா பாதகர்களே வெற்றி அடைந்தனர்.

சிறுவர்களே! இதுதான் சூதாடிச் சுப்பனால் விளைந்த மகா பாதகர் (பாரதக்) கதையின் சுருக்கம் என்று அறிக.

★

## கலைமகாநாடு, திருச்சி.

★

6—9—48 ல், திருச்சி கருணாநிதி பார்க்கில், மாலை 5 மணிக்கு கலைஞர்களின் கூட்டம் நடை[பெ]பெற்றது. திருவாரூர் எம். கருணாநிதி தலைமை வகித்தார். கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1. நாளது 26—9—48 ல் திருச்சியில் "கலைமகாநாட்டை" நடத்துவது என்று தீர்மானிக்கப்பட்டது.

2. மகாநாட்டின் வரவேற்பு கழக தலைவராக டி. பி. பொன்னுசாமியையும், மாணிக்கம், எஸ். வி. லிங்கம் காரியதரிசிகளாகவும் தேர்[ந்]

அறக்கட்டளை

# எங்கள் சிறை வாழ்வு!

## சிறை புகுந்தோன்.

★

இந்த அநுபவ மணிகளைக் கேட்ட வுடன் எங்களில் பல பேர் அந்தப் பக்கம் கூடப் போகத்துணியவில்லை. சிலர் மட்டும் துணிந்து, சிறை அநுப வத்தில் சோளக் கஞ்சியின் சுகம் எப் படி என்பதை அநுபவிக்க வேண்டாமா என்று கூறிக்கொண்டே கஞ்சியை வாங்கத் தலைப்பட்டார்கள். அந்தக் கஞ்சிக்குக்கொடுக்கப்பட்ட துவையல் இருக்கிறதே, அது நன்றாயிருக்கிறது என்று கூறினார்கள் என்றாலும், கஞ்சி யை வாங்கியவர்களில் பல பேர் சிறிது பருகியவுடன் கீழே கொட்டி விட் டார்கள்.

மணி 8 ஆனவுடன் நாங்கள் இருந்த பகுதியில் மற்ற கைதி களிடையேயும், வார்டர் களிடையேயும் கார்னிக் வார்டர்களி டையேயும் மிகுந்த பரபரப்பு ஏற்பட் டது. கைதிகள் எல்லாம் தங்கள் ஜெயில் ஆஸ்திகளை எடுத்துக் கொண்டு [சணல்விரிப்பு, கம்பளிப் போர்வை, தட்டுக்குவளை அல்லது மண்கலயம், ஜெயில் உடை, நிமார்க் செய்யும் ஒரு அட்டை ஆகிய இவை தான் கைதிக்குரிய ஜெயில் ஆஸ்தி] வரிசையாக நூல் பிடித்து ஒழுங்காக வரிசையாக உட்காரவைக்கப்பட்ட னர். ஆஸ்திகள் எல்லாம் ஒன்றின் மீது ஒன்றாய் ஒழுங்குபட அடுக்கப் பட்டிருந்தன. கார்னிக் வார்டர்கள் இந்தச் செயலுக்கு மிக ஒத்துழைத் தார்கள், வார்டர்கள் அங்கங்கே நின்று கொண்டு அதிகாரம் செய்தார்கள்.

இந்த இரண்டுவகை வார்டர்களைப் பற்றியும் இங்கு குறிப்பிடவேண்டும். வார்டர்கள் என்பவர்கள் கவர்ன்மெண் டார்களால் நியமிக்கப்பட்டவர்கள். வெளியில் நாம் பார்க்கும் போலீஸ் காரர்களைப் போலவே இவர்கள் உடையிருந்தாலும், தலையிலணிந் திருக்கும் தொப்பி பச்சை நிறமுடைய தாகவும், சட்டையில் மாட்டியிருக்கும் சின்னம் சற்று வேறு பட்டதாகவும் காணப்படும். கார்னிக் வார்டர்கள் என்பவர்கள், உடையைப் பொறுத்த வரையிலும் பெரும்பாலும் வார்டர் களைப் போலவே உடையணிந்திருந் தாலும் அந்த உடைகள் அனைத்தும், தொப்பியும்சேர, வெள்ளைநிறமுடை யதாகும். இவர்கள் எல்லாம் ஜெயிலி லேயே நியமிக்கப்பட்ட அதிகாரிகள். வெளியில் எப்படியோ ஒவ்வொரு குற் றம் செய்து விட்டு வாழ்க்கையில் பெரும் பகுதியை ஜெயிலிலேயே கழிக்கவேண்டும் என்று, ஆயுள் தண் டனை, 20 வருஷத் தண்டனை பெற்று ஜெயிலுக்கு வந்தவர்கள் இவர்கள். இத்தகையோர் நாளாக நாளாக ஜெயிலில் நடந்துகொள்ளும் நடவடிக்கைகளிலிருந்து, அங்கேயே இவர்கள் வசம் சில பொறுப்புகள் கொடுக்கப்பட்டுப், படிப்படியாய் யுயர்த்தி, கடைசியில் கார்னிக்வார்டர் என்ற பெயரோடு கைதிகளைக் கண் காணிக்கும் வார்டர்களுக்கு உதவியாள ராக மாதம் அரை ரூபாய்ச் சம்பளமும் பெறுகிறார்கள். ஜெயிலுள் இரவு நேரப் பாது காப்பு முக்கியமாய் இவர் களைச் சேர்ந்தது என்கிற அளவில் குறிப்பிட்டால் போதும்.

$8\frac{1}{4}$ மணி அளவில் எங்களிடம் ஒரு வார்டர் வந்து சூப்பரின்டெண்ட் வரப் போகிறார் என்றும், நீங்கள் எல்லாம் வரிசையாக நின்று அப்பொழுது உங் கள் குறைபாடுகளைக் கூறலாம் என் றும் வந்து கூறினார்.

சிறிது நேர விவாதத்திற்குப் பிறகு நாங்கள் தண்டனைக் கைதிகள் நின்ற மற்றொரு புறம் அவ்வாறே நின் றோம். ஆனால் நூல் பிடித்து நிற்க வில்லை என்பதை ஒப்புக் கொள்ளத் தான் வேண்டும். குறைபாடுகளைக் கூறுவதற்காகத் தலைவர் வேதாசலம் அவர்களை முதலில் நிறுத்தினோம். 2 நிமிஷம் நின்று பார்க்கச், சூப்பரின் டெண்ட் வராத காரணத்தால் எங்க ளில் பலர் முணங்கிக்கொண்டே உட் கார ஆரம்பித்து விட்டார்கள். இதைக்கண்டு தலைவர் வேதாசலம வர்களுக்கு வருத்தம் தான். ஆனால் வாய் விட்டுக் கூறவில்லை.

மீண்டும் சிறிது நேரங்கழித்து, வார்டரின் சமிக்ஞைக்குப்பின் எழுந்து நின்றோம். சூப்பரின்டெண்டும் தன் பரிவாரங்கள் சூழ அங்கு வந்து சேர்ந்து, எங்கள் 86-பேர்கொண்ட வரிசையில் 3-இடங்களில் நின்று பேசினார். அதுவும் ஆங்கிலத்தில் அவரிடத்தில் நம் தோழர்கள் பேசி யதுதான் காரணம்.

பொதுவாகக் குறைபாடுகளைக் கேட்ட சூப்பரின்டெண்ட் கூறிய தாவது, "நீங்கள் ரிமாண்டில் இருப்ப தால் உங்களைத் தனித்தனி கொட் டடியில் போடக்கூடாதென்றாலும் நீங்கள் ஜெயிலிலுள்ள காலியிடங் களை நிரப்பிவிட்டீர்கள், வேறு பிளாக்கோ காலி இல்லை, நீங்கள் மூவராகவோ நால்வராகவோ இருப்ப தில் எனக்கு ஆட்சேபணையில்லை யென்றார். மேலும் வெளியிலிருந்து சமைக்கப்பட்ட உணவை ஜெயில் சட்டப்படி அநுமதிப்பதற்கில்லை யாதலால், பழங்கள், டின்களிலுள்ள பொருள்கள் எதுவும் வருவதைத் தடைசெய்யமாட்டோம் எனவும் அறி வித்தார். நாங்கள் வரிசையாக நிற்க வில்லை என்பதில் அவரும் கவனஞ் செலுத்தினார் என்பதை எங்களில் சிலர் அறிந்தோம்.

பின் சூப்ரன் டெண்ட் தண்டனைக் கைதிகளின் வரிசையில் சென்றார், கடைசிவரை நடந்தார், திரும்பினார். அங்கு யாரிடமும் எதுவும் கேட்டதா கவோ அல்லது அக்கைதிகள் எதுவும் கூறியதாகவோ தெரியவில்லை. இந் தச்சடங்கு சம்பிரதாய ரீதியில் நடப்ப தெனக் கண்டுணர்ந்தோம்.

பெரியாரவர்களும் மற்றையத் தோ ழர்கள் அய்வரும் ஆஸ்பத்திரிக் கருகில் வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை எப்படியோ எங்கள் தோழர்களில் சிலர் தெரிந்துகொண்டார்கள். இச் செய்தியைத் தெரிந்த சிலருக்கும், அதைச் சொல்ல கேட்ட சிலருக்கும் விதவிதமான நோய்கள் உண்டாகிவிட் டன. ஒருவர் தலைவலி என்கிறார், மற்றொருவர் வயிற்றுவலி என்கிறார். இப்படியே ஒவ்வொருவரும் ஒவ் வொரு காரணத்தைச் சொல்லுகிறார் கிறார்கள். ஏக காலத்தில் 30-பேர் வரை கூடிக்கொண்டு, எல்லோரும் ஒருமிக்கச் செல்லவேண்டுமென்றால் அது எப்படிச் சாத்தியப்படும் என் பதை அவர்கள் எண்ணவில்லை. இத னால் உண்மையாகவே ஆஸ்பத்திரிக் குப் போகவேண்டிய நிலையிருந்த சிலர் பெரிதும் கஷ்டப்பட்டார்கள். பிறகு எப்படி எப்படியோ சிறு சிறு கூட்டமாக அவர்களில் பெரும்பா லோர் சென்றுவந்தார்கள். இதனால் மறுநாள் முதல் என்ன ஆயிற்று தெரி யுமா? ஆஸ்பத்திரியே நாங்கள் இருந்த இடத்திற்கு வந்துவிட்டது. தள்ளுவண்டியில் சர்பத் விற்பதைப் போல, ஒரு பலகையில் 20-வகைக் கும் மேற்பட்ட "பாட்டல்"களில் வெவ்வேறு நிறத் தண்ணீர்களை நிரப் பிக்கொண்டு, அங்கிருந்தமரத்தடியில் ஆஸ்பத்திரியைத் திறந்து வைத்தார் கம்பௌண்டர். ஆஸ்பத்திரி உள்ளே வந்த பிறகு ஒவ்வொருவரையும் கூப் பிட்டுக் கூப்பிட்டு மருந்து கொடுக்க வேண்டியதாயிற்று என்றாலும், இரண் டொருவரை டாக்டர் ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் செல்லும்படியாய் அவர் களின் உடல் நிலை பாதிக்கப்பட்டுத் தானிருந்தது.

(தொடர்ச்சி 13ம் பக்கம்)

---

தெடுக்கப்பட்டார்கள்.

சி. என். அண்ணாதுரை எம். ஏ சோமசுந்தரபாரதியார், எம். ஆர். ராதா, கம்பதாசன் முதலியவர் களை மகாநாட்டில் கலந்து கொள்ள அழைக்குமாறு தீர்மா னிக்கப்பட்டது.

கதை கற்பனை.

சிறுகதை முதற்பருவம். போட்டி எண் 13.

# வெந்த உள்ளம்!

அவள் கண்ணீருகுத்தாள்.........

வேப்பிலை, சலங்கொண்ட வடு, சாமி, டாக்டர் பரிசோதனை எல்லாம் பழைய கதையாகிவிட்டது.

மாரியாத்தாள் கோபமோ, டாக்டரின் அலட்சியமோ, மடமையின் சின்னமோ...அவன் இறந்துவிட்டான். வேலுச்சாமி செத்துவிட்டான்......... அவள் கண்ணீருகுத்தாள்.

மாடிகள் வைத்துக் கட்டப்பட்டிருந்தது. கண்ணாடி ஜன்னல்கள் இருந்தன. மருத்துவச்சாலை கெம்பீரமாகத்தான் நின்றது. அங்கே வேலுசாமி இறந்ததற்காக எவ்வித மாற்றமும் காணப்படவில்லை. நர்ஸுகள் திரிந்தனர். டாக்டர்கள் நடந்துகொண்டிருந்தனர்.

'அந்தக் கேஸ்?'

'எது? அதுவா? க்ளோஸ்!'

மிகச் சாதாரண விஷயமாகப்பட்டது அவர்களுக்கு.

அந்தப் பெரிய கட்டிடத்திற்குள் நுழைந்தாள். பலவித நோயாளிகள் முக்கல், முணகல், அலறல் எல்லாவற்றையும் கண்டாள். டாக்டர் இவற்றிற்கெல்லாம் செவிசாய்ப்பவராக இல்லை. நர்ஸுகள் மட்டுமென்ன, அதிக சந்தோஷத்தால் சில சமயம் மறந்து மருந்தை மாற்றிக் கொடுத்து விடுவது அங்கே மிகச் சாதாரணம்.

இதையெல்லாம் கண்டாள் அலமேலு. அவளுக்கு இதிலே நம்பிக்கையில்லை. மிகவும் பயந்திருந்தாள். டாக்டர் வந்தார். மாரியம்மனால் செய்ய முடியாத காரியத்தையா இவர் முடிக்கப் போகிறார்! அவளுக்கு நம்பிக்கையில்லை.

டாக்டர் என்னென்னமோ வைத்துப் பார்த்தார். ஒன்றும் சொல்லவில்லை. அவள் கேட்க விரும்பினாள். அது எப்படி முடியும்? கிராம வைத்தியன் குப்புசாமிப் பண்டிதன் பார்த்திருந்தால் அவனுக்கு இந்நேரம் 'ஒன்றும் தெரியாதவன்' என்று பட்டங் கிடைத்திருக்கும். இவர்தான் டாக்டராயிற்றே!

"பிள்ளைக்கு உடம்பு எப்படியம்மா இருக்கு?" அவள் நர்ஸைத்தான் கேட்க முடிந்தது.

"இன்னும் மூன்று நாள் சென்றுதான் கூற முடியும்." அவள் திடுக்கிட்டுவிட்டாள். "என் கண்ணு பிழைத்துக்கொள்வானல்லவா?" இதை அவள் கேட்கவில்லை; [illegible] நினைத்தாள், ஆனால் நர்ஸ் இன்னும் எத்தனையோ பேரின் கேள்விகட்குப் பதில் சொல்லவேண்டும். நர்ஸ் சென்று விட்டாள். அவனுக்குத் தொந்திரவு கொடுக்கக் கூடாது என்று தடுக்கப்பட்டிருந்தாள் அலமேலு.

எத்தனையோ நோயாளிகள் இருக்கிறார்கள் அங்கே. ஆனால் அலமேலுவுக்கு அந்த இடத்தில் சுடுகாட்டுத் தனிமை தோன்றியது.

* *

மாரியாத்தாள் மேல் தான் பாரத்தைப் போட்டிருந்தாள். மாரியம்மன் கோவிலின் சந்நிதானம், அங்கே வேப்பிலை பரப்பி அதிலே கிடத்தப்பட்ட வேலுசாமி, அவன் அருகில் கண்ணீர் வடிக்கும் அலமேலு.

'அலமேலு மகனுக்கு மாரியாத்தா வச்சிருக்காமே'

'ஆமா' கோயிலிலே கிடத்தியிருக்கிறது. பாவம், அவளைத் தான் நம்பியிருந்தாள்'

'தாலியற்ற சமயத்தில்கூட இவ்வளவு வருத்தப்படவில்லை, வேலுசாமி வயிற்றிலிருந்த தைரியத்தால்' ஆம் அந்தத் தெம்புதான்.

"தாலியற்றேன். வேலுசாமிதான் அவர் வைத்துவிட்டுப்போன செல்வம். அவனைத்தான நம்பியிருக்கிறேன். அவன் கைக்குயர்ந்தபிள்ளையானால், என்னையும் அவனையும் காப்பாற்ற அவனால் முடியாதா? எனது கலியாணத்தின்போது, ஆற்றின் மணலினும் பல நாள் வாழ்க என்று தான் வாழ்த்தினர். பார்ப்பான்கூட அப்படித்தான் மந்திரம் ஓதினானாம். ஆனால் பெரியவர்களின் வாக்கிற்கும் மந்திரத்திற்கும் மதிப்பளிக்க மறுத்துவிட்டது அவரின் 55 வது வயது. என்னவோ இறந்து விட்டார். கிழவர்கள் இறப்பது சகஜந்தானே என்று எண்ணியிருந்தேன். அதுதானே உண்மையுங்கூட. ஆனால் அந்தக் கிழவரின் தாயார் இருந்தாளே, அவள் வீசிய சொற்கள் என்னை வேதனைப்படச் செய்து விட்டது. நான் எந்த நேரத்தில் அவருக்கு வாழ்க்கைப்பட வந்தேனோ, அப்போதே அவருக்குச் சனி பிடித்து விட்டதாம். அவர் உயிருக்கு எமனாக வந்தேனாம் நான். இதையெல்லாம் பொறுத்துக் கொண்டுதான் இருந்தேன். அப்போது நான் கர்ப்பிணி. எல்லாம் இவன் தெம்புதான்.

"வேலுசாமி வளருவான், ஊர்ந்து திரிவான், சோற்றையெல்லாம் அள்ளியிறைப்பான், வீதிக்கு ஊர்ந்து கொண்டே சென்று விடுவான், வண்டிகள் வருமல்லவா, ஆகையால் ஓடோடி தூக்கிக் கொண்டு வந்து விடுவேன். 'அம்மா' 'அத்தே' என்று தன்மழலை வாயால் கூறுவான். அப்பா என்று கூறத் தெரிந்தால்......ஆம் அந்தக் 'கிழம் இறந்து விட்டது என்றுதான் கூற வேண்டும். தாத்தாவை உதைக்கிற கால் எது? அப்பாயியை எப்படிச் சண்டை போடுவாய்?......மேலும் வளருவான். ஆட்டு மந்தைகளைத் திறமையாய் மேய்த்து விடுவான். வேலுவை 13வது வரை படிக்க வைக்கலாமா? அய்யய்யோ! வேண்டவே, வேண்டாம். அடுத்த வீட்டு சுந்தரம் படித்ததனால், கண்பட்டே இறந்து விட்டான். அவன் 2வது வரை படித்திருந்தான்......பின்னர் கலியாணம் செய்யவேண்டும். பச்சைக்கிளிபோல, எனக்கு அடங்கக்கூடிய பெண்ணாகப் பார்க்க வேண்டும்......" இப்படியெல்லாம் எண்ணி மகிழ்ந்து மனக்கோட்டை கட்டியிருந்தாள் அலமேலு. ஆமாம் அவள் மனம் அப்படித்தானே எண்ண முடியும்? பட்டண வாசியா அவள்? பட்டணமாயிருந்தால் மட்டும் இந்த எண்ணங்களுக்கு விதிவிலக்கா என்ன?

வேலுசாமிக்குத்தான் அம்மை பூட்டியிருந்தது. மாரியாத்தாள் சந்நிதியில் கொண்டு போய்ப் போட்டிருந்தாள். வௌவால் நாற்றம், இருண்ட அறை, காற்றோட்டமில்லாத இடம், அரையங்குல களிம்பேறிய கற்சிலை இவைகளைத்தான் நம்பியிருந்தாள், மகன் பிழைத்துக்கொள்ள. சிலை கழுவி விடப்பட்ட சாக்கடை நீர்தான்மருந்து. வதங்கிய வேப்பிலை, சீக்குவாசனை, அம்பாளுக்குப் படைத்த சோறு இவையும் உண்டு—சீக்கு வளர்ந்தது.

அலமேலு அச்சங் கொண்டாள். சீக்கு வளர்கிறதை அறிந்தல்ல. ஆத்தாள் ஆத்திரங்கொண்டாள் என்பதற்காக! தாமதமின்றி பூசாரி வரவழைக்கப்பட்டான். அம்பாளின் கோபம் சிறிது உண்டாம்; அதற்கு நிவர்த்தி ஒரு குட்டி (ஆடு) கொடுத்தலாம். உடுக்கிலே சொனனது இது. அதையும் செய்வித்தாள். ஆனால் அம்பாளின் கோபம் இறங்கவில்லை.

அவள் எண்ணம் ஓயவில்லை. அலைகள் ஓடிக்கொண்டேயிருந்தது. அவளுக்கு நெஞ்செல்லாம் வலித்தது. அவ்வளவு பெரிய மருத்துவ விடுதியிலும் அடங்காமல் அவள் துக்கம்

(தொடர்ச்சி 13-ம் பக்கம்)

# இருபத்திரண்டாம் ஆண்டு!

[நா. மு. மாணிக்கம்]

★

பயங்கரமான பாதை!

பலபேர் அந்தவழியைப் பார்ப்பதற்கே அஞ்சி நடுநடுங்கிய பாதை!

மிகச் சிலர்-விரல்விட்டு எண்ணக்கூடிய சிலர் பெருத்த தைரியத்துடன், படைபலத்துடன் முன்னேற்பாட்டோடு சென்றார்கள் என்றாலும், அவர்கள் சென்ற—சென்று நடுவழியிலேயே அழிந்துபட்ட சுவடு கூடத் தெரியாமல் அழிக்கப்பட்ட பாதை!

மனிதர்களை அச்சுறுத்தி வந்த இந்தப் பாதை வெறும் கல்லும் முள்ளும் நிரம்பியது என்று மட்டும் சொல்லிவிடமுடியாது!

பாதையின் துவக்கத்தில் கற்களும் முட்களுமாய்க் காணப்படினும், போகப் போக வேதசாஸ்திரம் என்னும் வேங்கைகளும் பழக்க வழக்கங்கள் என்னும் பெரும் மலைப் பாம்புகளும் தனிச்சையாய்த்தனி அரசு ஓச்சும் பாதை!

மூடப்பிடிவாதம் என்னும் முதலைகள் வாயைத் திறந்தவாறே கிடக்கும் ஓடைகள் நிரம்பியது இந்தப்பாதை!

இந்த ஆபத்தான பாதையை உலகில் இருக்க விடலாமா? என்று துணிந்து யாரேனும் எடுத்தடி வைக்கத் துணிந்தால், இனிய தாயையும் தந்தையையும், ஏன் மனைவியைக்கூட விஷம் நிரம்பிய தேள்களாகவும், பூரான்களாகவும் மாற்றியமைக்கும் பேராற்றல் வாய்ந்த பாதை!

தேளையும், பூரானையும் பொருட்படுத்தாமல் வலியைத் தாங்கிக்கொண்டு, சென்றே ஆகவேண்டுமென்று மறு அடி எடுத்துவைத்தால் உறவினர், ஜாதிக்காரர் என்னும் உக்கிரமமான நட்டுவாக்களிகளால் கடிக்கப்படும் பாதை!

உதறி எறிந்து உடனே அடுத்த அடி எடுத்து வைத்தால் சமுதாயம் என்கிற புதர்களிலிருந்து பாயும் வெறி நாய்களுக்குப் பலியாக வேண்டிய பாதை!

வெறி நாய்களை வெருட்டி ஓட்டி, உடலில் ரத்தம் கசிய, உள்ளத் தளர்ச்சியின்றி, களைப்பு மேலிட்டுச் சற்றுக் களைதீர இருந்தாலோ, "உனக்கேன் இந்த வேலை? உனக்கு உல்லாச வாழ்தானே வேண்டும்? பொன்வேண்டுமா? பொருள்வேண்டுமா? பெண் வேண்டுமா? பிறகு என்னதான் வேண்டும்?" என்று இன்மொழி பேசி, அயர்ந்தபோது அழித்தொழிக்கக், கொஞ்சிக் குலாவத் துடிதுடிக்கும் பெண்ணுரு என்னும் அழகிய படமெடுத்தாடும் நல்ல பாம்புகளுக்கு இரையாக வேண்டிய பாதை!

உண்மையை யுணர்ந்து, உல்லாஸ எண்ணத்தை தூக்கி அடித்தாலோ, உயர் ஜாதி என்னும் சாக்கடையிலிருந்து எழும் கொசுக்களும், அட்டையும் வெளிப்படையாகவே வந்து தாக்கும் விபரீதமான பாதை இது!

சாண் ஏறினால் முழம் சறுக்கும் என்பார்களே, அதுவேறெதற்கும் பொருந்தாவிட்டாலும் இந்தப் பாதையைப் பொறுத்தவரையிலும் முற்றிலும் அது பொருந்தும். இந்தச் சறுக்கலான பாதையில் 'புதிய சமுதாய அமைப்பு' என்னும் பெரும் பாரத்தையும் தோளில் சுமந்து ஏறவேண்டிய நிலையில், வன்னெஞ்சத்து வசைமாரிகள்! ஆதிக்கவாதிகளின் கடூரமான இடிகள்! அழுக்கேறிய ஆணவ உள்ளத்துப் பொறாமைப் புயல்கள்! மறைந்துநின்று வஞ்சகமாகத் தாக்கும் இராமபாணங்கள்! எதிர்த்து நில்லாமல் எப்படியோ நின்று எறியப்படும் எறியீட்டிகள்! ஆம்! இத்தனை கடுமையான அபாய நிலைகள் அந்தப்பாதையில் உண்டு!

இத்தனையையும் தாண்டித்தான் அந்த லட்சிய எல்லையையடையவேண்டும்!

இந்தப் பாதையில் தான்—சென்றவர் திரும்பாத இந்தப் பாதையில் தான்—யாரும் செல்லத் துணியாத இந்தப் பாதையில் தான், மறத் தந்தை பெரியாரவர் மனந்துணிந்து புறப்பட்டார்கள் சுமார் 25 வருடங்களுக்கு முன்பு!

அவர்களின் செயலுக்கு உற்ற துணையாக, அவர்களால் தோற்றுவிக்கப்பட்ட அன்னையாம் குடி அரசு, இன்று இருபத்தொரு ஆண்டுகளைத் தாண்டி இருபத்திரண்டாவது ஆண்டின் முதலிதழாக உங்கள் கையில் தவழ்கிறது.

காலஞ்சென்ற திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் மடத்து அதிபர், சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாச்சாரிய சுவாமிகளின் வாழ்த்தைப் பெற்று 3. 5. 25-ம் நாள் குடி அரசு தோன்றியதை எண்ணும் போது, இப்போது 24-வது ஆண்டு இசழாக இது இருத்தல் வேண்டும்! ஆனால் பாதையிலுள்ள பயங்கரமான ஆபத்துகள்! ஆண்டிருந்தோர்களின் அடக்குமுறைப் பாணங்கள்! சஞ்சலத்தைத்தந்திட ஜாமீன் கெடுபிடிகள்! சித்தத்தைக் கலக்கிட சிறைதள்ளும் கொடுமை! சீமான்களின் சீற்றம்! பண்டிதர்களின் பதறல்! புரோகிதர்களின் புன்செயல்! மதவாதிகளின் மருண்டநோக்கு! சங்கராச்சாரிகளின் சல்லடம்! பாதிரிமார்களின் பயங்கர அழிவுவேலை! இதற்கு மேல் இடை இடையே ஏற்பட்ட பொருள் நஷ்டம்! இவைகளையும் எண்ணும்போது இந்த 22ம்ஆண்டு இதழ் எத்தனை மகிழ்ச்சிக்குரிய இன்ப இதழ்!

அன்று, காஞ்சீபுரம் மாகாண மாநாட்டில் தமிழ்ப் பெரியார் திரு. வி. க. அவர்களின் தலைமை, பார்ப்பனீயத்தின் படுமோசச் செயலுக்கு ஒத்துழைத்ததைக் கண்டு, பல சம்பவங்களால் பார்ப்பனீயத்தின் உட்கருத்தை உணர்ந்திருந்த பெரியாரவர்கள், அப்பொழுதே அம்மாநாட்டிலிருந்து எழுந்து,

"இன்று முதல் ஜாதி ஒழிப்புக்கும், வகுப்புவாரிப்பிரதிநிதித்துவத்துக்கும் நான் தனியே நின்று உழைக்கும் வேலையைக்கைக் கொள்ளப் போகிறேன்"

"காங்கரசின் யோக்கியதையையும், அதைக் கைப்பற்றித் தங்கள் சுயநலத்துக்குப் பயன்படுத்திக் கொள்ளும் பார்ப்பனர்களுடையவும், அவர்களது அடிமைகளுடையவும், கூலிகளுடையவும் யோக்கியதையையும் பாமர மக்கள் உணரும்படி செய்வதையே எனது முக்கிய தொண்டாகக் கொள்ளப் போகிறேன்"

என்று வஞ்சினம் கூறி வெளிவந்த பின்,

"மக்களுக்குள் சுயமரியாதையும், சமத்துவமும் ஓங்கி வளர வேண்டும்" என்னும் உயர்ந்தலட்சியத்தோடு துவக்கப்பட்டது குடி

[தொடர்ச்சி 11ம் பக்கம்]

# யார் அய்ந்தாம் படையினர்?

[★]

சமீபத்தில் முடிவடைந்த யுத்தம் நிகழ்ந்த காலத்தில்தான் அய்ந்தாம் படை என்ற வார்த்தை பிரபல்ய மடைந்தது. உடன் இருந்து கொண்டே துரோகம் செய்து, மாற்றானுக்குக் காட்டிக்கொடுக்கும், நய வஞ்சக உலுத்தர் கூட்டத்தினர்தான், அய்ந்தாம்படையினர் என்பது யுத்த கால அகராதியின் பொருள். அவர்களுக்கு மாற்றானிடம் மதிப்பும், செல்வாக்கும் இருந்து வந்திருக்கிறது. அவர்கள் போர்த் தளங்களில் உள்ள இரகசியங்களைத் தெரிவித்து வருவதுடன், தான் இருக்கும் படைவரிசையில் பிளவுகளை வளர்த்துப் பலவீனத்தை உண்டாக்கிக்கொண்டு இருப்பது தான் காரணம். இது போன்ற துரோகிகள் இரு முகாம்களிலேயுமே இருந்திருக்கின்றனர். இவர்களுடைய செயல்கள் வெளிப்படுமாயின் அவர்களை இராணுவ நீதிமன்றத்தில் நிறுத்திவைத்து மரண தண்டனைதான் பரிசாக வழங்கப்படும், இதுதான் நியாயமும் கூட.

போர் முடிவடைந்த பிற்காலத்தில் இந்த அய்ந்தாம் படை என்ற வார்த்தை சர்வசாதாரணமாக உலகத்தில் உலவ ஆரம்பித்துவிட்டது. ஒவ்வொரு துறைகளிலும் அய்ந்தாம் படை வேலைக்காரர்கள் தோன்ற ஆரம்பித்துவிட்டதுதான் இதற்குக் காரணம். அதுவும், இந்திய உபகண்டத்தில்தான் அய்ந்தாம் படையினர் அதிகமாக இருந்துமிருக்கின்றனர்—இன்னும் இருக்கின்றனர். கால வரையறையே கண்டு பிடிக்க முடியாத காலத்தில் விபீஷணன் போன்றவர்களும், சரித்திரகாலத்தில் அமிர்ச்சந்த், வேங்கண்ணா போன்றவர்களும் இருந்தனர். இன்று ஜெயபிரகாஷ் நாராயணன், காமராஜர், அருணா ஆசப் அலி, லோகியா போன்றவர்களும் இருக்கின்றனர். இன்றிருப்பவர்கள் தங்களை ஆகஸ்ட் வீரர்கள் என்றும் தேசிய வாதிகள் என்றும் கூறிக்கொண்டு வருகின்றனர். இவர்களுடைய அய்ந்தாம்படை வேலைகளைப்பாமரமக்கள் சரியாகத்தெரிந்து கொள்ளாத காரணத்தால் இவர்களைத் தியாகிகளாகவும், வீரர்களாகவுமே மதித்து வருகின்றனர்.

திராவிட நாட்டில்தான் அய்ந்தாம் படையினர் அதிகமாக இருக்கின்றனர், விளக்கமாகக் கூறவேண்டுமானால் திராவிடத்திலுள்ள தேசியவாதிகள் அத்தனைபேரும் அந்தக் கூட்டத்தினர்தான். திராவிட நாட்டிலுள்ள அய்ந்தாம் படையினர்களின் தலைவர் நமது வெறுப்பிற்குரிய காமராஜர் ஆவார். 28—8—48 ல் குற்றாலத்தில் கூடிய தமிழ்நாடு காங்கரஸ் காரிய கமிட்டிக் கூட்டத்தில் இவர் இந்தி எதிர்ப்பாளர்களாகிய நம்மைபற்றிக் குறிப்பிடும்பொழுது "அய்ந்தாம்படையினரையொத்த கெட்ட எண்ணம் படைத்தோர்களே இக்கிளர்ச்சிக்காரர்கள் என்றே சொல்லவேண்டியிருக்கிறது" என்று கூறியிருக்கிறார். கோடைகாலத்திற்கேற்ற குற்றாலத்தில் ராமநாதபுரம் ராஜாவின் பங்களாவில் இருந்து கொண்டு அவர் கூறியிருக்கிற படியால், வெப்பம் மிகுதியாலாவது அல்லது வேலை அதிகத்தினாலாவது அவருடைய மூளைக்கு ஏதாவது கோளாறு ஏற்பட்டிருக்குமென்று நம்ப முடியவில்லை. அவருடைய கூற்றின் கடைசியில் காணப்படும் "சொல்லவேண்டியிருக்கிறது" என்ற வார்த்தையைக் கொண்டு பார்க்கும்பொழுது, அவர் அப்படிச்சொல்லவேண்டிய சூழ் நிலையில் சிக்கிக் கிடக்கிறார் என்பதும், அப்படிச்சொன்னால் பொருந்தாது—மக்களும் ஏற்றுக்கொள்ளவும் மாட்டார்கள் என்பதும் விளங்குகிறது.

விபசாரி தன்னுடைய இழி செயலை மறைப்பதற்குச் சமயம் கிடைக்கும் பொழுது அண்டைவீட்டுப் பெண்களையும் விபசாரிதான் என்று பொய்ப்பிரசாரம் செய்யத் தயங்க மாட்டாள். திருடனும் கூட இந்த முறையைப் பின்பற்றிப் பிறருடைய குறைகளை எடுத்துக் கூறுவதிலேயே கண்ணும் கருத்துமாக இருப்பான். மேற்கண்டவர்களைப் போலவே காமராஜநும் தம்முடைய அய்ந்தாம் படை வேலையை மறைப்பதற்கு நம்மை அய்ந்தாம் படையினர்என்று கூறியிருக்கிறார். இதில் வியப்பேதுமில்லை! காமாலைக் கண்ணனுக்குக் கண்டதெல்லாம் மஞ்சளாகத்தானே தெரியும்?

காமராஜர் தமிழ்நாடு காங்கரஸ் வட்டாரத்தில் ஒரு தேய்ந்துபோன வெள்ளிப் பணமாகவே மதிக்கப்பட்டு வருகின்றார். அவருடைய வார்த்தைகளோ செல்லாத செம்புக் காசுகள் தான். அவருக்கு வடநாட்டில் இருக்கும் மதிப்பு, கடைவீதியில் செலாவணியாகாத கள்ள நாணயத்திற்கு இருக்கும் மதிப்பைப் போன்றதுதான். பின் எப்படி தமிழ்நாடு காங்கரஸ் கமிட்டித் தலைவராக இருக்கிறார் என்ற சந்தேகம் தோன்றும்? காலி மணிப்பர்சில் செல்லாத காலணா—அரையணாவாவது இருக்கட்டுமே என்று சிலர் போட்டுவைக்கிறார்களே அதுபோலத்தான் காமராஜர் தலைவராக இருப்பதும்.

திராவிடர் கழகத்தினர் இதுவரை இந்த நாட்டையோ-சமுதாயத்தையோ யாருக்கும் காட்டிக்கொடுத்தவர்கள் அல்ல. அடிமைப்பட்டுக் கிடக்கும் நாட்டிற்கு விடுதலையும், சுரண்டப்பட்டு நலிந்திருக்கும் சமுதாயத்திற்குச் சுகவாழ்வும் பெற்றுத்தரப் பாடுபடுபவர்கள். அதற்காகப் போர்க்களம் புகுந்திருக்கின்றனர். காமராஜரின் அய்ந்தாம்படை வேலைக்குத் தடையாய் இருப்பவர்கள். ஒரு பெரிய இனத்தைக் காட்டிக் கொடுக்கும் தன்னுடைய தன்மானமற்ற செயல்களையும், உதைத்த காலுக்கு முத்தமிடும் உறுதியற்ற கொள்கையுடையவர் என்பதையும் மக்களுக்கு விளக்கிக் காட்டி வருவதைக் கண்டு நம்மீது பாய்கின்றார். பல்லில்லா பாம்பு பதறி என்ன செய்ய முடியும்! அவருக்கிருக்கும் மதிப்பு, யோக்கியதை என்ன என்பது தான் அவர் மீனம்பாக்கம் விமான நிலையத்திற்கு ராஜாஜியை வரவேற்பதற்குச் சென்றிருந்த பொழுது அவரை ஒரு பார்ப்பனப் போலீஸ் அதிகாரி வெளியே தள்ளியதிலிருந்தே தெரிந்து விட்டதே! உண்மையில் காமராஜருக்குக் கொஞ்சமாவது மான உணர்ச்சி இருக்குமானால் சி. ஆரை வரவேற்கச் செல்வாரா? வரவேற்க வேண்டிய அவசியம் ஏற்பட்டாலுமே அவர் ஒப்புக்கொள்ளக் கூடாதே! அப்படியிருக்கத் தானாகவே சென்று, தாங்கமுடியாத அவமானத்துடன் வெளியில் வந்து, பின் நகரசபை வரவேற்பில் போய் கலந்துகொண்டார். இந்த வெட்கம் கெட்ட செயலை வெளியில் தெரியப்படுத்தி விட்டதற்காக நம்மீது சீறுகின்றார். கோபத்தையும், ஆத்திரத்தையும் காட்ட வேண்டிய இடம் எங்கேயோ இருக்க, நம்மீது அவர் பாய்வதைப் பார்த்தால் "தென்னை மரத்தில் தேள் கொட்ட பனை மரத்தில் நெறியேறுகிறது" என்பார்களே அதுபோல் இருக்கிறது இவருடைய செயல். இவருக்குத் தமிழ்நாடு காங்கரஸ் வட்டாரத்தில் இருக்கும் மதிப்பையும், இவர் பேச்சிற்கு மக்களிடம் இருக்கும் செல்வாக்கையும்கண்டு, இவருடைய கூற்றிற்குப் பதில் கூறும் வகையில் இந்தக் கட்டுரையை எழுதவில்லை. காமராஜநும் அவருடைய சகாக்களும் எந்தெந்தத் துறைகளில், எப்படியெப்படி அய்ந்தாம் படை வேலை செய்கின்றனர் என்பதைச் சிறிதுவிளக்குவதே எனது நோக்கம்.

"காம ராஜரும்" அவருடைய பரிவாரங்களும் அடிக்கடி தங்களை ஆகஸ்ட் வீரர்கள் என்று விளம்பரப் படுத்திக்கொண்டிருப்பதுடன், ஆகஸ்ட் தியாகிகளுக்கு வீரமான்யம் வழங்கப் போவதாகவும் கூறிக்கொண்டு வருகின்றனர். 1942-ல் இவர்கள் பகிரங்கமாகச் செய்த காலித்தனத்தையும், அய்ந்தாம்படை வேலையையும்

(தொடர்ச்சி 10ம் பக்கம்)

இலக்கியப் பகுதி.

# கண் காணா யானை.

[புலவர் அழகுவேலன்]

★

தமிழரின் தலைசிறந்த பண்புகளில் ஒன்று காதல், ஏனையது வீரம். காதலைப்பற்றிய பண்பைப்பிறகு பார்ப்போம். இப்பொழுது அறப்போர்க் காலம் ஆதலால் வீரம் பற்றி ஆராய்வோம். வீரம் என்ற சொல் பெருமிதம் என்று வழங்கப்பட்டுள்ளது. எண்வகைப் பொருட் சுவையில் பெருமிதம் என்பதும் ஒன்று. போர்த்துறையில் காட்டும் வீரத்திற்குப் பெருமிதம் என்று கூறினாலும், கல்வி, தறுகண், இசை, கொடையாகிய துறைகளிலும் பெருமிதத்தை மேற்கொண்டிருந்தனர் தமிழர்.

தமிழ்நாட்டுக் கல்வி முறையில், இன்றும் இந்நாட்டு முன்னோர்களைப் பற்றிய வாழ்க்கை வரலாறுகளைக் கற்பிக்கப்படுவதில்லை. மேனாட்டார், வடநாட்டாரைப் பற்றி அறிகின்ற அளவுகூட தமிழ்நாட்டைப் பற்றி, தமிழ் மக்களைப் பற்றி மாணவர்கள் அறியவில்லை கற்பிக்கப்படாத காரணத்தால். ஆரியர், திராவிடர் என்ற ஒரு பக்க ஏட்டு அளவோடு விட்டுவிடுகின்றனரே தவிர, மேலும் கற்றுத் தெளிவடைவதற்கேற்ற வாய்ப்பை யளிக்காதவாறு கல்வித் துறையில் ஆட்சிசெலுத்தி வந்த ஆரியப் பார்ப்பனர் ஆக்கிவிட்டனர். தமிழக இளைஞர்கட்கு நாட்டுப் பற்று குன்றுவதற்கு ஆசிரியர்களே முதல் காரணகருத்தாவாவர். வரலாற்றுப் பாடநேரங்களில் தமிழர் வரலாற்றை உள்ளது உள்ளவாறு உரைத்திருப்பார்களேயானால் புது உலகம் தோன்றி மறுமலர்ச்சி நாடாக மிளிரும் நம் செந்தமிழ் நாடு.

இனியேனும் திராவிட ஆசிரியர்களும், மாணவர்களும் விழிப்புற்றுத் தத்தங் நிலையை அறிய அவாவி, பேரூக்கத்துடன் முயன்று உழைப்பார்களேயானால் திருவிடம்; நாவலந் தீவு நம்மைவிட்டுப் போகாது என்பது உறுதி! உறுதி!!

தமிழக இளைஞர்கட்கு ஒரு படக்காட்சி. போர்ப்படம்! வரலாற்று உண்மை நிறைந்த காட்சி. அஞ்சாநெஞ்சம் படைத்த வீரர்களின் விற்போர்க்காட்சி. அத்தகைய ஓவியத்தை உங்கள்முன் நிறுத்துகின்றேன் சிந்தியுங்கள். தன்மானத்தமிழனின் போர்த்தொழில் வாழ்க்கை எத்தகையது? என்று எண்ணிப்பாருங்கள்.

இதோ காட்சிதருகின்றான் சோழன். செங்கணான் என்பது அவ்வீரன் பெயர். போரில் எழுந்த கடுஞ்சினத்தால் கண்சிவக்காமல் என்ன செய்யும்! கருத்த அவன் மேனியில் சிவந்து மிளிர்ந்த கண்களை எண்ணும்போது, இயல்பாக அமைந்த, கருப்பிற் சிவப்புக் கலந்த கொடியன்றோ அசைந்து ஆடுகின்றது. ஆம்! போர்க்களத்தில் சிவந்த கண் படைத்த சோழன், ஆடாமல் அசையாமல் ஆசனத்தில் அமர்ந்து, போர்வீரரை ஏவிவிட்டு வேடிக்கைபார்க்கவில்லை. அக்கொடி காற்றுடன் கலந்து சுழல்வதுபோலச் சுழன்று சுழன்று பகைவருடன் போர்புரிகின்றான் செங்கணான். ஆம்! அவனைப்போன்று, போர்ப்பயிற்சியும், அஞ்சா உள்ளமும், உடல் உரனும் எய்த வேண்டுமென்ற எண்ணம் இயல்பிலேயே இளைஞர்கட்கு ஏற்படாமற்போகுமா? அதைப் படிக்கும் பொழுது.

சோழன் தன்னை எதிர்த்த பகைவருடன் நெருங்கிப் போர்புரிகின்றான். கலங்குதலில்லாமல் வீரரை ஊக்கிப் போரை நடத்துகின்றான் செங்கணான். தலைவன் கட்டளையை மீறாது கட்டாகப் போர்புரிகின்றனர் வீரர். கட்டுப்பாடு, உறுதி, ஊக்கம், உண்மை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு நடத்தப்படும் எந்தப் போர்தான் வெற்றியடையாது? வெற்றி நமதே! வெற்றி நமதே! என்ற நம்பிக்கையோடு போர்புரிகின்றனர் தமிழ் வீரர்கள். இறுதியாகப் பகைவர்கள் போர்க்களத்தில் வலியிழந்தார்கள். அதுமட்டுமா? தன்மானத்தையும் இழந்தனர். முரசுகளையெல்லாம் போர்க்களத்திலேயே போட்டு விட்டு ஓடினர். போர்க்களத்திலிட்ட முரசம் படைகளால் ஊறுபட்டன. இரத்தக்கறை படிந்து கிடந்தன. செங்கணான் படைவீரரால் தாக்கப்பட்ட யானைகள் கண்ணிழந்தன. தத்தங்கால்களே வழிகாட்ட களிறுகள் கடிது நடந்தன. எதிரில் படும் பொருள்களை உதைத்தன. பகைவரிட்டமுரசம் கண்ணிழந்த யானைகளின் காலுதைக்கு அஞ்சி அலறின. அவ்வலறல் மேக முழக்கம்போல இழுமென எழுந்தது. இதுவன்றோ இன்றைய இளைஞர்கட்கு எடுத்துரைக்க வேண்டிய பாடம். இத்தகைய வரலாற்றுக் கட்டுரைகளைக் கண்ணுறும் சிறாரின் சிந்தனை, தமிழரின் வீரவுணர்ச்சியை ஏற்றே தீருமன்றோ?

“கழுமிய ஞாட்பினுள் மைந்திகந்தா ரிட்ட
வொழிமுரச மொண்குருதி யாடித்—தொழின்மடிந்து
கண்காணா யானை யுதைப்ப விழுமென
மங்குன் மழையி னதிரு மதிராப்போர்ச்
செங்கண்மா லட்ட களத்து.

(களவழி நாற்பது) போய்கையார்.

அதிராபோர்-கலங்குதலில்லாத போரையுடைய, செங்கண்மால்—செங்கட்சோழன், அட்டகளத்து-கொன்ற போர்க்களத்தில், கழுமிய—நெருங்கிய, ஞாட்பின் உள்-போரில், மைந்து இகந்தார்—வலியிழந்தவர்கள், இட்ட—போகவிட்ட, ஒழிமுரசம் — ஒழிந்த முரசம், ஒள் குருதி—ஒள்ளியவுதரத்தில், ஆடி — படிந்து, தொழில் மடிந்து—(தம்) தொழிலைத் தவிர்ந்து, கண்காணா—(படைகளாலூறுபட்டு) கட்புலனிழந்த, யானை உதைப்ப-யானைகளுதைத்தலால், மங்குல் மழையின்-மேகம்போல, இழும் என அதிரும்—இழுமென முழங்காநிற்கும்.

●

## இந்தி எதிர்ப்புப் போர்

சென்னை மறியல்காரர்களை லாரியில் ஏற்றிச் சென்று சுடுமணலில் இறக்கிவிடும் பழக்கத்தைப் போலீசார் விட்டு விட்டனர்.

திராவிட நாட்டின் அவமானச் சின்னமாக மகாராஜா கவர்னர் வந்த நாளிலிருந்து மறியல்காரர்கள் எல்லாம் 41-ஏ பிரிவுப்படி கைது செய்யப்பட்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டு வருகின்றனர்.

குடி அரசு

11—9—48 சனிக்கிழமை.

# போர்க்களத்திலே பிறந்த நாள் விழா!

—o—

நமது தலைவர் பெரியார் அவர்களுக்கு 17-9-48ல் 70வது பிறந்த நாள். நமது 'குடி அரசு'க்கு இன்று 22வது ஆண்டு பிறந்தநாள். போர்க்களத்திலே அடுத்தடுத்து இரண்டு பிறந்த நாள் விழாக் கொண்டாடும் அருமையானவாய்ப்பைப் பெற்றிருப்பதற்காக நாம் பெரு மகிழ்வெய்துகிறோம்.

நமது தலைவர் பெரியார் அவர்களால் தோற்றுவிக்கப்பட்ட 'குடி அரசு' சென்ற 21 ஆண்டுகளாக எவ்வளவோ எதிர்ப்புகளுக்கும், சர்க்கார் அடக்கு முறைகளுக்கும் ஆளாகி, அவ்வளவையும் சமாளித்துக்கொண்டு, பெரியார் அவர்களது கருத்துக்களைத் தைரியமாக மக்களுக்கு எடுத்துக்கூறி வந்திருக்கிறது. தமிழ் நாட்டுப் பொது வாழ்வில் முற்போக்கான எண்ணங்களுக்கு வழி காட்டியது நமது 'குடி அரசே' யாகும்.

இன்றைக்கு நம் நாட்டில் வெகு காரசாரமாகப் பேசப்பட்டு வரும் 'கம்யூனிசம்' என்ற வார்த்தையை, முதல் முதலில் இந்நாட்டு மக்களுக்குச் சொல்லிக் கொடுத்த வாத்தியார் நமது 'குடி அரசு' தான். அவ்வளவு ஏன்?—இன்றைக்குத் தமிழ்நாட்டுக் கம்யூனிஸ்டுக்கட்சிக்கு ஒரு தலைவனைத் தயாரித்துக் கொடுத்த பெருமை கூட நமது 'குடி அரசு'க்குத்தான் உண்டு. இன்றைக்கும் தமிழ் நாட்டிலுள்ள பல கம்யூனிஸ்டுத் தலைவர்களும், தோழர்களும் வெளிப்படையாக இல்லா விட்டாலும் கள்ள மார்க்கெட்டிலாவது அதாவது ரகசியமாகவாவது நமது 'குடி அரசு' வால்யூம்களை வாங்கிப் படித்து—உருப்போட்டுக் கொண்டு தான் வருகிறார்கள்என்பதை நாம் அறிவோம்.

அது ஒரு புறமிருக்கட்டும். இன்று ஆட்சியிலிருக்கும் காங்கரஸ்காரர்கள் சங்கதியை வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளுங்கள். அவர்கள் இன்று ஆலயப் பிரவேச மசோதா, மதுவிலக்கு மசோதா, ஜமீன் ஒழிப்பு மசோதா என்பன போன்ற பல மசோதாக்களைச் செய்து தீரவேண்டிய அவசியம் ஏன் வந்தது என்பதை எண்ணிப்பாருங்கள். நமது 'குடி அரசு' வால்யூம்களைச் சற்று புரட்டிப் பாருங்கள். பிறகு உண்மைவிளங்கி விடும்.

நாம், ஆரம்ப கால முதற் கொண்டு கோவில்களில் அனைவருக்கும் செல்ல உரிமை இருக்க வேண்டும் என்று போராடி வந்திருக்கிறோம். ஜமீன்தாரர்களைப் பற்றியும், சமஸ்தான மன்னர்களைப்பற்றியும் வண்டிவண்டியாக அவர்களது வண்டவாளங்களை தயவு, தாட்சண்யமின்றி எடுத்துக் கூறிவந்திருக்கிறோம். அவ்வாறு கூறிய காரணத்திற்காகவே நமது தலைவர் பெரியாரவர்கள் சிறைப் படவும், நமது குடிஅரசுத் தலையங்கங்களின் தொகுப்பாகச் சிலவற்றைக் "குடியரசுக் கலம்பகம்" என்னும் பேரால் புத்தக வடிவில் வெளியிட்டதை சர்க்காரால் பறிமுதல் செய்யப்படவும் நேரிட்டிருப்பதை இது சமயம் ஞாபகப் படுத்த விரும்புகிறோம்.

மேற் சொன்ன மாதிரியான பல தொல்லைகளுக்கும் இடையே நாம் சற்றும் அஞ்சாமல் பொது மக்களிடையே புத்துணர்ச்சியை வளர்த்து வந்ததின் காரணம்தான் இன்று யார் பதவிக்கு வந்தாலும், முற்போக்குவாதிகள் என்று காட்டிக் கொண்டால் மட்டுமே தங்களைப் பொதுமக்கள் மதிக்க முடியும் என்பதை உணர்ந்து தீர வேண்டி ஏற்பட்டு விட்டது. ஆகவே தான் நாம் விரும்புகிற அளவுக்குச் சட்டம் செய்ய மனமும், தைரியமும் இல்லாமற் போனாலும் வார்த்தையளவிலாவது மேற்சொன்ன மசோதாக்களைச் செய்தாகவேண்டிய நிலைமையில் வந்து சிக்கிக்கொண்டார்கள்.

எதற்காக இவைகளைக் கூறுகிறோம் என்றால், உண்மையிலேயே இன்று ஆட்சியிலிருப்பவர்கள் மக்களுக்காக—மக்கள் நலனுக்காக ஆட்சி செய்ய விரும்பினால் முதலில் அவர்கள் இந்நாட்டுப் பார்ப்பனீயப் பிடிப்பிலிருந்தும், வடநாட்டான் ஆதிக்கத்திலிருந்தும் விடுபட்ட சுதந்தர மனிதர்களாக விளங்கினால் ஒழிய எந்த ஒரு காரியத்தையும் உருப்படியாகச் செய்ய முடியாது. இதை நாம் சதாகாலமும் கூறிவருகிறோம். அதை அவர்கள் உணராமலோ — உணர்ந்தாலும் விடுபட்டு வரத் தைரியமில்லாமலோ— அந்த இரண்டு பிடிப்பிலும் இருந்து கொண்டே, தாங்களும் பெரிய புரட்சிகரமான காரியங்கள் செய்வதாக விளம்பரப் படுத்திக்கொண்டு வருகிறார்கள்.

அத்துடனாவது இருந்து கொண்டால் பரவாயில்லை. ஆனால் பார்ப்பனீயமும், வடநாட்டு ஆதிக்கமும் ஆட்டிவைக்கிறபடியெல்லாம் "ஆடுவோமே, பள்ளுப் பாடுவோமே" என்றபடாணியில் இறங்கி, நம்மீதே வம்புச்சண்டைக்கு இழுத்துப்போர் தொடுக்கிறார்களே அதை நினைக்கும் பொழுதுதான் நமது உண்மையான எதிரிகளான பார்ப்பனீயத்தையும், வட நாட்டு ஆதிக்கத்தையும் ஒழிப்பதற்கு முன்னதாக அவர்களது எஜண்டுகளாக—கைக் கூலிகளாக— நமது நாட்டுக்கு அய்ந்தாம்படையாக விளங்கும் நமது நாட்டிலேயே பிறந்து— நம்முடன் வளர்ந்து நம்மையே ராம ராஜ்யம்" என்னும் பேரில் ஆண்டு வரும் விபீஷணர்களையும், சுக்ரீவன்களையும் செல்வாக்குப்பெறாமல் ஒழித்துக்கட்ட வேண்டியது நமது முதல் வேலையாகப்போய் விட்டது.

ஆனால் அந்த வேலையைக்கூட நாம் செய்வதற்கு முந்தியே இந்த நாட்டுப் பார்ப்பனர்கள் செய்து விடுவார்கள் போல் தோன்றுகிறது.

அதாவது, இப்போதைய மந்திரிமார்களை மிரட்டி அவர்களைக் கொண்டே நம்மை ஒழித்துக்கட்டவும், பிறகு கவர்னர்பிரபு தயவைக் கொண்டு இந்த மந்திரி மார்களையும், சட்டசபைகளையும் ஒழித்துக் கட்டிவிடுவார்கள் என்றே தோன்றுகிறது. இவ்வாறு நாம் கூறுவதற்குக் காரணம் இப்போதைய நிலைமையைச் சற்று சிந்தித்துப் பார்த்தால் விளங்காமல் போகாது.

இன்று நாம், இந்த நம் நாட்டுக்

# திராவிடர் கழக மத்திய நிர்வாகக் கமிட்டி தேர்தல்.

தூத்துக்குடி மாகாண மாநாட்டில் அறிவித்தபடி ஒவ்வொரு ஜில்லா கமிட்டியில் இருந்தும் மத்திய நிர்வாகக் கமிட்டிக்கு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்க வேண்டியது மிக அவசியமானதாகும். ஆதலால் ஒவ்வொரு மாவட்ட கமிட்டியினரும் அந்தந்த மாவட்டங்களின் எண்ணிக்கைப்படி உறுப்பினர்களை விரைவில் தேர்ந்தெடுத்து தெரிவிக்க வேண்டுகிறேன்.

திருநெல்வேலி, தெற்கு ராமநாதபுரம், மதுரை மாவட்டக் கழகத்தினர் தங்களது நிர்வாக உறுப்பினரைத் தேர்ந்தெடுத்திருப்பதாகத் தெரிகிறது.

மற்றும் வடக்கு ராமநாதபுரம், திருச்சி, தஞ்சை, கோவை, சேலம், தென் ஆற்காடு, வட ஆற்காடு, செங்கற்பட்டு, சென்னை ஆகிய மாவட்டக் கழகத்தினரும் தங்களது எண்ணிக்கைப்படி நிர்வாக உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

அப்படித் தேர்ந்தெடுக்கும்போது கூடுமானவரை பழைய உறுப்பினர்களே தொடர்ந்து இருப்பதில் ஆக்ஷேபணை இல்லையானால் கூடுமான வரை அவர்களே தேர்ந்தெடுக்கப்படலாம் என்று யோசனை கூறுவதோடு, அந்தப்படி எதிர்பார்க்கிறேன்.

ஈ. வெ. ராமசாமி.

குறிப்பு:— "கோ ஆப்ட்" செய்யப்பட்டிருக்கும் அங்கத்தினர்கள் எண்ணிக்கையானது ஜில்லா கோட்டாவில் சேர்ந்ததல்ல.

---

குத் தேவையில்லை என்பதைஇவர்கள் உணராமிருக்கிறார்கள். அதற்கு மாறாக நம் தலைவர் மீதும், நம் மீதும் அனாவசியச் சண்டையைத் தொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். நாம் என்ன காரணத்திற்காக இந்தியை எதிர்க்கிறோம் என்று கூறினோமோ அதற்கு எடுத்துக்காட்டாக— ஒருசாட்சியமாக—இன்று நம் மாகாணத்துக்கு ஒரு வடநாட்டு ஆசாமியை, அதிலும் ஒரு மகாராஜாவையே கவர்னர் பிரபுவாக நியமித்திருக்கிறார்கள். அதோடு மட்டும் நிற்கப் போவதில்லை. இப்போதைய நமது மந்திரிமார்கள் நல்லமுறையில் நம்மை அடக்கி— ஒடுக்கி— ஒழித்துக் கட்டாவிட்டால் இந்நாட்டுப் பார்ப்பனர்கள் கவர்னர் பிரபு அவர்களிடம் இந்த மந்திரிமார்கள் மீது "குசலம்" மூட்டிக் கொண்டேயிருப்பார்கள். அதற்குத் தேவையான தலையாணி மந்திரங்கள் அவர்களுக்கு நன்கு தெரியும்.

அந்த மந்திரத்துக்கு அடிமையாகாமல் உண்மையாகவேமுற்றும் துறந்த துறவி கூட இருக்க முடியாதென்றால் அப்புறம் மன்னாதி மன்னனான பவநகர் மகாராஜா— அதிலும் நம் நாட்டுக்குப் புதிதாக வந்திருக்கும் மைனர் மகாராஜாவைப்பற்றிச் சொல்லவேண்டுமா? ரொம்ப சீக்கிரத்தில் இந்த மந்திரி சபையை ஒழித்துக்கட்டி கவர்னர் பிரபு அவர்களையே 93-வது செக்ஷன்படி நாடாளச்செய்யப் போகிறார்கள்என்பதை நாம்இப்போதே நமது "பிறந்த நாள் விழாச்சேதி" யாக "ஜோசியம்" கூறுகிறோம்.

அப்பொழுதுதான் நமது மந்திரிமார்களுக்குத் தெரியும், நம்மை அடக்கி- ஒடுக்கி-சிறையிலடைத்து விட்டது எவ்வளவு பெரிய தப்பிதம் என்பதாக. உணர்ந்தால் மட்டும் என்ன பயன்? அப்பொழுதாவது மான உணர்ச்சி வருமானால் நமது கழகக்கொடியை ஏந்திக் கொண்டு "வடநாட்டு ஆதிக்கம் ஒழிக!" என்றுகூவி—சிறைப்பட்டு —நாம் இருக்கும் இடம் தேடி வந்து, நமது தலைவர் பெரியார் அவர்களிடம் "நாங்கள் செய்த தவறை உணர்ந்தோம், உத்தமர் காந்தியாருக்குப்பின் எங்களுக்குத் தாங்களே வழி காட்டி—தலைவர்! இது உண்மை, முக்காலும் உண்மை" என்று சொல்லி ஒன்றுபட்டு சிறைக்கதவைத் திறந்து கொண்டு அங்குள்ள கம்யூனிஸ்ட் தோழர்கள், நாம், நமது மந்திரிமார்கள் அனைவருமாகச் சேர்ந்து கொண்டு திராவிடநாடு திராவிடருக்கே என்ற பேரொலியுடன் வெளியில்வரும் நாள் அதிக தூரத்தில் இல்லை—வெகு சமீபத்தில் இருக்கிறது என்ற பெரு நம்பிக்கையுடனேயே நமது 'குடி அரசு' 22-வது ஆண்டைத் தொடங்குகிறது என்பதை வாசகர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

வாழ்க பெரியார்!
வாழ்க குடி அரசு !!
ஒழிக வடநாட்டு ஆதிக்கம்!
ஒழிக பார்ப்பனீயம் !!
திராவிடநாடு திராவிடருக்கே !!!

[:●:]

ஆசிரியருக்குக் கடிதம்.

## வெள்ளையன் ஆட்சியில் தேசிய வாதிகளின் சொற்போர்.

★

பெங்களூர் 7—9—48.

"தாழ்வாரம் தொப்பிக்காரன் படித்தது 2ம் வகுப்போ, 3ம் வகுப்போ அல்லது ஏர் உழுதுகொண்டிருந்தானோ தெரியாது அந்த ஊரிலே. (இங்கிலாந்திலே). அவனுக்கு இந்த ஊரிலே (இந்தியாவிலே) "போலீஸ் சார்ஜண்ட்" உத்தியோகம்! சம்பளம் என்னவென்றால் 250 ரூ! ஆனால் பாரதமாதா புத்திரன் சுப்பராயன் படித்தது பி. ஏ! உத்தியோகம் என்னவென்றால் "சப்இன்ஸ்பெக்டர்"! சம்பளமோ 75 ரூ துவக்கம்! ஏன் என்று கேட்டால் அவனுக்கு (ஆங்கிலேயனுக்கு) ஆங்கிலம் தாய்மொழி! ஆட்சியும் ஆங்கில ஆட்சி! ஆகையால் அவன் ஏர் உழுது கொண்டிருந்தவனானாலும் இந்த இந்தியாவிலே உயர்ந்த உத்தியோகம். ஆதலால் தான் வெள்ளையனே வெளியேபோ என்கிறோம்."

இது அன்று காங்கரஸ் தோழர்களின் மேடைச்சொற்போர். இன்று 'இந்தி' கட்டாய பாடமாக்கப்பட்டிருக்கிறது, தமிழ் மொழியைத்தமிழ் மக்கள் சரிவரப் பேச முடியாது தவிக்கும் இந்தத்தமிழ் நாட்டிலே. ஆங்கிலேயனுக்கு எவ்விதம் ஆங்கிலம் தாய்மொழியாய் இருந்து ஆங்கிலேயனை உயர்ந்தபதவிக்குஉட்படச்செய்ததோ! அதேபோல் இந்தியைத் தாய் மொழியாய்க் கொண்டிருக்கும் வட நாட்டவர் சீக்கிரத்திலே இந்தியைக் கற்றுக் கொண்டு உயர் பதவி அடைவர், தமிழ் மொழியையே படிக்க தெரியாமல் இருக்கும் தமிழ் மக்கள் இந்தியை கற்றுக்கொள்ள முடியாது. அவர்கள் இன்னும் தாழ்ந்தே போவார்கள்.

இங்கு மிக்சர் வண்டி ஓட்டியும், மோம்பல்லியான் விற்றுக்கொண்டிருந்தவன் இங்கேயே,சேட் பதவி அடைந்துவிடுகிறான். இந்தசெந்தமிழ் நாட்டில் தன் மானத்தோடு வாழ்க்

ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

தமிழன், செங்குட்டுவன் மரபிலே உதித்த தமிழன், வீரமாய் போர் புரிந்து கனக விசயனையும் வென்று, மலைமீது புலி கொடி நாட்டிய வீர மன்னனின் மரபிலே உதித்த தமிழன், இன்றோ சிங்கப்பூர், மலேயா போன்ற நாடுகளுக்கு சென்று ரப்பர் தேயிலை தோட்டத்திலே கஷ்டப்படுகிறான். ஆகவேதான் இந்தி வேண்டாம் என்கிறார்கள் தமிழ் பெரியார்கள். தமிழ் மக்களும் வேண்டாம் என்கிறோம்.

தமிழர் என்று சொல்லவும் முடியவில்லையே! தமிளர் என்கிறோம். தமிழ் நாட்டிலே தமிழ் மக்கள் பேசும் மொழியை காதால் கேட்குங்கால் தமிழ் குருதி கொதிக்கின்றது. அவர்கள் பேசுவது கெரி, கெத்தரக்காய், கெருவாடு, வாயபயம், தக்காளி பயம், உருல கெயுங்கு என்று திணறி, திணறிப்பேசுகிறார்கள், தமிழர் என்று சொல்லவும் முடியாத நிலையிலே. இந்த கெரி, கெத்தெரிக்காய் என்பதை கறி, கத்தரிக்காய் என்று பேசும்படி சீர்திருத்த முன்வராத இந்த சுயராஜ்ய சர்க்கார் இந்தியை வேறு நுழைத்து விட்டது! (வெட்கமாயிருக்கிறது) வயிற்றுக்கின்றி மிலிட்டரியிலே அல்லது வேறெந்த உத்தியோகத்திலாவது அமர்ந்து வெளியூர் சென்றிருக்கும் துணைவன், துணைவிக்கு அனுப்பும் பணத்தை வாங்குவதற்கு கட்டைவிரல் அடையாளம் தவிர கையொப்பமிட தெரியாத தமிழகத்திலே இந்தி வேறு! எடுத்து சொல்பவர் மீது ஏவுகின்றார்கள் அடக்குமுறை பாணத்தை, வாழ வழி வகுக்க தெரியாத சர்க்கார். பேசினால் 32மைலுக்கு அப்பாலுள்ள சவுக்கு தோப்பிலே விட்டு விடுவார்கள்.

“நமஸ்தே சார்” சாப்பிட்டீங்களா, ஜே இங் சார். டீ குடித்தீர்களா! இது தமிழா? ஆங்கிலமா? இந்தியா? எந்த மொழியில், எந்த வகையில்தெரிகிறது பாருங்கள்! வணக்கம் என்று சொன்னால் வாயவிந்து போகுமா? வணக்கம் என்று சொல்லவெட்கமாயிருப்பதன்றி புது மொழியாய் தெரிகிறதாம்! அதுவும் திராவிட கழகத்தாரிடமாத்திரம்! “நமஸ்தே” “ஜேஇங் (குடலைபிடுங்கி கொண்டு வருகிறது) என்று சுலபமாக உச்சரிக்க வருகிறது போலும்.

போலோ பாரத்மாதாவுக்கு ஜே! அன்னை கஸ்தூரிபாயிக்கிஜே! (எழுதக்கூட வெட்கமாயிருக்கிறது) என்று ஜே கொட்டுகிறார்கள் தேசியகாங்கரஸ் மந்திரிகள். ஆனால் அதே மாதாவின், கஸ்தூரிபாயின் அவயவங்களுடைய தோழியர் தனலக்ஷ்மி அம்மையாரை (எட்டுமாத கர்ப்பிணியை) சென்னையிலிருந்து 32 மைலுக்கப்பாலுள்ள சவுக்கு தோப்பிலே விட்டு விட்டு வருகிறார்கள். ஜே கொட்டி சுயராஜ்யம் பெற்ற சுதந்தர சர்க்காரின் வீரர்கள்.

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

தன் மானமுள்ள காங்கரஸ் தோழனாய் இருந்தால் இனி பாரத மாதாவுக்கும், அன்னைக்கும் ஜே கொட்டமாட்டான்.

ஆங்கிலேயன் போன இடத்திற்கு வடநாட்டான் வருவான் என்று பெரியார் அவர்கள் கூறியது உண்மையிலும் உண்மை. என் வாழ்க்கையிலே கண்கூடாய் கண்ட ஒன்றை எழுதுகிறேன். பங்களூரிலே “சவுத்பெரெட்ரோட். (இப்போது மகாத்மா காந்திரோட்) எனனுமிடத்தில், ஆங்கிலேயன் இருக்கும் போது ஆணும், பெண்ணுமாக ஆங்கிலேயர் தான் மாலையில் உலாவுவார்கள். ஆனால் இன்றோ ஆங்கிலேயன் சென்றபின் பெரியார் சொல்வது போல வடநாட்டு பனியாகூட்டமே ஆணும், பெண்ணுமாக உலாவுவதை காணுகிறோம்.

இந்தி படித்தால் தமிழ் மக்களுக்கும், தமிழ் மொழிக்கும் ஆபத்து! ஆகவே தோழியர்களே, ஆண்களுக்கு நாம் (பெண்மணிகள்) இளைத்தவர்களல்லர்! இந்தி எதிர்ப்பில் நாமும் தீவிரமாகப் பங்கு கொள்ளுவோம்.

சி. ஆர். விசாலக்ஷ்மி.

# திருச்சியில் நிர்வாகக் குழு.

திருச்சி. செப் 4.

இன்று காலை 10-மணிக்கு தலைவர் டி. பி. வேதாசலம் அவர்கள் இல்லத்தில் திராவிடர் கழக நிர்வாகக் குழு கூடியது. 27-உறுப்பினர்கள் வந்திருந்தனர். கழக முக்கியஸ்தர்கள் பலர் வந்திருந்தாலும் நிர்வாகக் குழுவுக்கு உறுப்பினர்கள் மட்டுமே அனுமதிக்கப்பட்டனர். நிர்வாகக் குழு செய்த முடிவுகள்.

1. தூத்துக்குடியில் 25-பேர் கொண்ட இ. எ. பிரசாரக் குழு ஒன்றைத் துவக்க அனுமதி கொடுத்தது.
2. துறையூரில் மறியலைத் துவக்க, பெரியார் நேரில் சென்று பார்த்து அனுமதி கொடுப்பது.
3. செப்டம்பர் 15-ல் இந்திஉள்ள எல்லாப்பள்ளிகளிலும் ஒரு நாள் மறியல். பெண்கள் பள்ளிகளில் பெண்களே மறியல் செய்தல்.
4. வடநாட்டு மார்வார் மன்னர் சென்னைக் கவர்னராக வருவதையொட்டி 7-உ ஒவ்வொரு ஊரிலும் கருங்கொடியுடன் கூட்டம் நடத்திக் கண்டனம் செய்தல்.
5. மறியல் செய்ய உரிமை தந்த சர்க்கார், அமைதியான முறையிலும் சட்டபூர்வமான முறையிலும் நடக்கும் மறியலை, நசுக்கும் நோக்கத்துடன் பல முறைகளில் கையாளும் அடக்குமுறையைவன்மையாகக் கண்டித்தது.
6. இந்தி எதிர்ப்புக்காக நிதி திரட்டத் தலைவர் பெரியாரவர்கள் வேண்டிய ஏற்பாடுகளைச்செய்யக் கேட்டுக் கொள்ளுகிறது.
7. விடுதலைக்கு ஜாமீன் நன்கொடை நிதியாக மக்கள் அளித்த 15,200-ரூபாய்க்கு கமிட்டி நன்றியும் வணக்கமும் செலுத்துகிறது.

கமிட்டிக் கூட்டம் முடிந்ததும் வெளியூர்களிலிருந்து கழக முக்கியஸ்தர்களாக வந்திருந்த 200-பேருக்கு மேற்பட்டவர்களைக் கண்டு தலைவர் பெரியாரவர்கள் மேல் நடைபெற வேண்டியவைகளைப் பேசினார்கள்.

[6ம்பக்கத் தொடர்ச்சி]

ஆகஸ்ட் புரட்சி என்று கூறிக்கொண்டும், அதில் கலந்து கொண்டவர்களுக்கு வீரமான்யம் தரப்போவதாகவும் கூறுகின்றனர். 1942 ல் உலகம் பயங்கரயுத்தத்தில் மூழ்கிக்கிடந்தது. ஜப்பானின் பார்வை இந்தியாவை நோக்கிக் கொண்டிருந்த சமயம், இந்திய மக்களிடையே உள்நாட்டுக் கலவரத்தை ஏற்படுத்துவதற்காகப் பொது மக்களின் சொத்துகளான தபால் ஆபீஸ்களையும், கோர்ட்டுகளையும் தீயிட்டுக் கொளுத்தியதுடன், தந்திக் கம்பிகளை அறுத்தும், ரயில் தண்டவாளங்களை பெயர்த்தெறிந்தும் கொலை, கொள்ளையடித்தல்போன்ற காலித்தனங்களிலும் ஈடுபட்டனர். எப்படியாவது அன்றைய அரசாங்கத்தின் மீது பொது மக்களுக்கு வெறுப்பேற்படும்படி செய்து அரசாங்கத்தை பலாத்காரமாகக் கைப்பற்றுவது அல்லது ஜப்பான்காரனுக்குக் காட்டிக் கொடுத்து விடுவது என்று திட்டமிட்டு வேலை செய்தனர். இவர்கள் அன்று செய்த துரோகச்செயல்களுக்கும், ஜப்பானியனுக்கு இந்தியாவைக் காட்டிக் கொடுக்கச் செய்தஅய்ந்தாம்படை வேலைகளுக்கும் “புரட்சி” என்ற பொருள் இருக்கிறது போலும் காங்கரஸ் அகராதியில்.

இவர்கள் அன்று செய்த காலித்தனத்தினால் பொது மக்களுடைய சொத்துகள் வீணாக்கப்பட்டதும், நிரபராதியான பாமர மக்கள் துன்பப்பட்டதும் தான் பலன். எங்கள் ஆகஸ்ட் தனத்தால் தான் இந்தியாவிற்குச் சுதந்தரம் கிடைத்தது என்று அவர்கள் கூறுவார்களானால், (அதனால் சுதந்தரம் கிடைக்கவில்லை) அப்படித்தான்கிடைத்ததென்று வைத்துக் கொண்டாலும், அதனால் காங்கரஸ் காரர்கள் தங்களின் அதிகார ஆசையைப் பூர்த்திசெய்து கொள்ளத்தான் முடிந்ததே தவிர பொது மக்களுக்கு என்ன பலன் ஏற்பட்டது? இவர்கள் அன்று செய்தது புரட்சியா, அல்லது அய்ந்தாம் படை வேலையா என்பதை நீங்களே முடிவு செய்து கொள்ளுங்கள். திராவிட நாட்டின் பொதுச் சொத்திலிருந்தாவது, மக்களுடைய வரிப்பணத்திலாவது இந்த காலிகளுக்கு வீரமான்யம் என்ற பெயரால் நிலத்தையோ, அல்லது ரொக்கப்

பணத்தையோ கொடுப்பார்களானால் வருங்கால திராவிடச் சர்க்காரால் அதை வட்டியுடன் பறிமுதல் செய்யப்படும் என்பதை தெரியப்படுத்துகிறேன். அப்படிக் கொடுப்பதானால், காங்கரஸ் கமிட்டியின் பணத்திலிருந்து கொடுக்கட்டுமே?

திராவிடநாட்டிலுள்ள அய்ந்தாம் படையினர்களின் தலைவர்தான் காமராஜர். அவரும் அவருடைய கோஷ்டியாரும், தேசியத்தின் திரைமறைவிலிருந்து கொண்டு செய்து வரும் அய்ந்தாம்படை வேலைகள் மன்னிக்க முடியாத குற்றமுடையவைகள். திராவிட மக்களின் அரசியல், சமுதாய இயல், பொருளாதார இயல் ஆகிய மூன்று துறைகளையும் வடநாட்டவருக்கும், பனியா—பார்ப்பனக் கூட்டத்திற்கும் காட்டிக்கொடுத்து வரும் வடநாட்டுக்கூலிகள்- அய்ந்தாம்படைக்காரர்கள். இவர் தம்முடைய அய்ந்தாம்படை வேலையை மறைப்பதற்கு நம்மை அப்படிக் கூறியிருக்கிறார்.

இந்தி எதிர்ப்பு இயக்கத்தின் நடவடிக்கைகளை அரசாங்கத்திற்கு அடிக்கடி தெரியப்படுத்துவதென்றும், சமயம் வந்தால் அவர்களை அரசாங்கத்திற்குப் பிடித்துக் கொடுப்பதாகவும் ஜில்லாக் காங்கரஸ் கமிட்டிகள் தீர்மானம் செய்து அதன் கிளைக் கமிட்டிகளுக்கு அனுப்பியிருப்பதுடன் மேற்கொண்டு நடவடிக்கை எடுத்துக்கொள்ளும்படியும் தாக்கீது அனுப்பியிருப்பதாக நம்பத்தக்க வட்டாரங்களில் செய்தி உலவுகிறது. இவர்களும் மாகாண கமிட்டியின் அனுமதியின்றி அப்படிச் செய்யவும் மாட்டார்கள். இதைக்கொண்டு பார்க்கும் பொழுதே இவர்களுடைய அய்ந்தாம்படை வேலை நன்குவிளங்கும்.

திராவிடத்தை வடநாட்டுத் தொடர்பிலிருந்து பிரித்துத் தனி சுதந்தரக் குடியரசு நாடாக அமைக்கவேண்டும் என்பதையே நமது அரசியல் கோரிக்கையாகக் கொண்டு பணியாற்றி வருகின்றோம் நாம். இந்தச் சமயத்தில் நமது தனிநாடு கோரிக்கையை கிண்டல் செய்தும், அது வெற்றிபெறாமல் போவதற்குச் சூழ்ச்சி செய்துகொண்டும் வருகின்றனர். இதே சமயத்தில் இந்தியை திராவிடர்கள் மீது கட்டாயமாகப் புகுத்தி நமது சிறப்புக்குரிய உயர் பண்புகளையும், கலாச்சாரங்களையும், நாகரீகத்தையும் ஒழித்து, நம்மை என்றென்றுமே வடநாட்டு அடிமைகளாகவே வைத்திருக்க முயற்சிக்கின்றனர். இதற்கு "சரிதான்" போடுகிறார் காமராஜர், அதாவது அய்ந்தாம்படையினராக இருந்து நம்மைக் காட்டிக் கொடுக்கிறார். இந்தி இன்றையக் கல்வித்திட்டத்தில் ஒரு சாதாரண இடம் பெற்றிருக்கவில்லை. அது வருங்காலத் தேசிய மொழி என்றும் கூறப்பட்டு வருவதால் அதை அரசியல் காரணத்தையும் அடிப்படையாகக் கொண்டும் எதிர்க்கிறோம். நாம் இந்தியைத் தேசிய மொழியாக ஏற்றுக்கொள்வோமேயானால் நமது திராவிட நாடு கோரிக்கை அர்த்தமற்றதாகிவிடும். நம்மைப் போலவே தமிழரசுக் கழகத்தினரும் தனிநாடு கோரிக்கையுடையவர்கள். ஆகையால் இந்தியைப் பொதுமொழியாக ஏற்றுக்கொள்ள மறுத்துப் போராட்டத்தில் இறங்கியிருக்கின்றனர். வடநாட்டு ஏகாதிபத்தியத்தின் கூலியாட்களைக் கொண்டு அமைக்கப்பட்டிருக்கும் அரசியல் நிர்ணய சபையினரால் தீர்மானிக்கப்படும் எந்த முடிவும் நம்மைக் கட்டுப்படுத்தாதென்று நாம் முன்னரே கூறியிருக்கிறோம். அந்தச் சபையினர் தீர்மானிக்கும் எந்தப் பொதுமொழித் திட்டத்தையும் நாம் ஏற்றுக்கொள்ள முடியாது. திராவிடக் குடியரசுக்கு ஒரு பொது மொழி தேவைப்படுமானால் அதை வருங்கால திராவிடத்தில் அமையப்போகும் அரசியல் நிர்ணய சபையினரால் தான் முடிவு செய்யப்பட வேண்டுமே தவிர இதில் வடநாட்டவருக்கு எந்த உரிமையும்கிடையாது. இதுபோன்றபல நியாயமான காரணங்களை அடிப்படையாகக் காட்டி, நேர்மை தவறாது போராடும் நம்மை அய்ந்தாம் படையினர் என்கிறார் காமராஜர். அவருடைய கூற்றில் அர்த்தமிருக்கிறதா வென்றும், யார் அய்ந்தாம் படையினர் என்பதையும் சிந்தித்துப்பாருங்கள்!

இந்தியாவில் வியாபாரத்தை அடிப்படையாகக் கொண்டு நுழைந்த வெள்ளையர்கள், கடைசியில் அதன் அரசியல் ஆதிக்கத்தைக் கைப்பற்றி விட்டது போல், திராவிடத்தில் வியாபாரிகளாக வந்திருக்கும் வடநாட்டினர் இதன் அரசியலைக் கைப்பற்றித் திராவிடத்தைத் தங்கள் மார்க்கட்டாக உபயோகித்து இங்குள்ள செல்வங்களைக் கொள்ளையடித்துக் கொண்டிருக்கின்றனர். இந்தக் காரணத்திற்காகத்தான் வடநாட்டு கோடீஸ்வரர்கள் தேசிய இயக்கத்தை ஆதரித்தும், வளர்த்தும் வருகின்றனர். இந்த உண்மையை உணர்ந்திருந்தும்கூட தங்களது சொந்த லாபத்தைப் பெரிதாக கருதிக்கொண்டு "எல்லோரும் இந்திய நாட்டு மக்கள்தான்" என்று தேசியம் பேசித்திராவிடத்தின் அரசியல் பொருளாதாரத் துறைகளை வடநாட்டவருக்குக் காட்டிக்கொடுக்கும் அய்ந்தாம் படையினராவே இருக்கின்றனர் காமராஜரும் அவருடைய கோஷ்டியாரும். நமது கலை, நாகரீகத்தையும், பண்பாட்டையும் குலைக்கும் இந்தியைப் புகுத்துவதற்கும் உடைந்தையாய்இருக்கின்றனர். இவர்கள் பகிரங்கமாகவே அய்ந்தாம் படை வேலை செய்து கொண்டு வருகின்றனர்.

சமுதாயத் துறையிலும் திராவிட இனத்தைப் பார்ப்பனீயத்திற்குக் காட்டிக் கொடுக்கின்றனர். இவர்கள் கொஞ்சம் கூட மனித உணர்ச்சியற்றவர்களாகவே இருக்கின்றனர். தங்கள் சமுதாயத்தின்மீது சுமத்தப்பட்டிருக்கும் சூத்திரன் என்ற இழிவைப் போக்க வேண்டும் என்று கவலைப்படுவதே கிடையாது. காமராஜர்தமிழ்நாடு காங்கரஸ் கமிட்டி தலைவராகவும், ஓமந்தூரார் சென்னை பிரதமராகவும் இருக்கலாம். ஆனால் அவர்கள் வர்ணாஸ்திரம சட்டப்படி சூத்திரர்களாகவே இருக்கின்றனர். இவர்களுக்கும் சில சமயத்தில் எதிர்பாராதவகையில் இவ் உணர்ச்சி ஏற்படுகிறது. அதை தலைமை பீடத்தை கைப்பற்றுவதற்கும், பிரதமர் நாற்காலியை பிடிப்பதற்கும் பயன்படுத்துகிறார்களே தவிர தங்கள் மீது இந்து மதத்தினால் பூசப்பட்டிருக்கும் சூத்திரன்—வேசிமகன் என்கின்ற கறையைத் துடைப்பதற்கு எண்ணுவது கிடையாது.

திராவிட சமுதாயத்தின் விடுதலைக்காகவும், உரிமைக்காகவும் பாடுபடும் நம்மை அய்ந்தாம் படையினர் என்கிறார் திராவிடநாட்டவரின் அரசியல் உரிமையை வடநாட்டவர்களுக்கும், திராவிடநாட்டுச் செல்வத்தைக் கொள்ளையடிக்க வடநாட்டு பனியாக் கூட்டத்திற்கும், திராவிடத்தின் புகழுக்குரிய சிறப்புகளை ஒழிப்பதற்கு இந்தியைப் புகுத்துவதற்கும், திராவிட இனத்தைப்பார்ப்பனீயத்திற்கும் காட்டிக்கொடுக்கும் அய்ந்தாம்படைக் கூட்டத்தின் தலைவர்காமராஜர்.திராவிடநாட்டில் அய்ந்தாம்படையினர் யார் என்று முடிவு செய்யும் உரிமையை மக்களுக்கே விட்டு விடுகிறேன்.

இந்த நாட்டில் இருக்கிற அய்ந்தாம் படையினர் யாராய் இருந்தாலும் சரி, அவர்களை வருங்காலத் திராவிட மக்கள், நீதிமன்றத்தில் நிறுத்தி வைத்து, நல்லதொரு தீர்ப்புக் கூறத்தான் போகின்றனர். துரோகிகளுக்கும், அய்ந்தாம் படையினருக்கும் வருங்காலத் திராவிடத்தில் வாழ இடமிருக்காது.

"பத்ததாசன்"

[5ம் பக்கத் தொடர்ச்சி]

அரசு. இந்த லட்சியப் பாதையில் செல்லத்துணிந்த பெரியாரவர்கள், "என்னையே எண்ணி இப்பெரும் பழி ஏற்றேன்" என்று கம்பரால் சித்திரிக்கப்பட்ட இராவணன் கூறுவதைப்போல நானும் என்னொருவனையே நம்பித்தான் இந்த வழியில் செல்லத் துணிந்தேன் என்று அப்பொழுதிருந்தே தன்னிலைமையை விளக்கி வந்திருக்கிறார்கள். அதற்கேற்பப்படை பலமில்லாமல், பொருள்பலமில்லாமல், பத்திரிகை பலமில்லாமல் தன்

மன வலிமையையும் செயலின் நியாயத்தையுமே நம்பி, செய்யப்பட்டே ஆகவேண்டிய அவசியத்தை எண்ணிச் செயலில் இறங்கியதினால்தான், இன்றுசெல்லவேண்டிய லட்சியப் பாதையில் யார் வேண்டுமானாலும் வண்டியை யோட்டலாம் என்று எண்ணத் தகுந்த ரீதியில் ஒரு அளவுக்கு ஆவது பாதை ஒழுங்குபடுத்தப்பட்டிருக்கிறதெனலாம்.

காலத்திற்கேற்ற வண்ணமும், நிலைமைக்கு ஏற்ற வண்ணமும், ஒவ்வொரு பொருள்களும் மாறித்தான் தீரவேண்டும் என்னும் இயற்கை நியதிக்கேற்ப, உயிருள்ள சுயமரியாதை இயக்கமும் காலமாறுதலைக் கடந்து, பல நிலைகளையும் தன்னுள் அடக்கி மாறுதலுக்கு ஆளானாலும், தன்னுடைய லட்சியப் பாதையிலிருந்து சிறிதும் விலகவேயில்லை. சுயமரியாதையும் சமத்துவமும் என்கிற அளவு கருவியைக் கொண்டு, அளந்து பார்க்கின்ற எவரும், 'திராவிடநாடு திராவிடருக்கே' என்னும் இன்றைய நம் திட்டம் வரையில் நம்முடைய எந்தச் செயலுமே மாறுபட்டது அல்லது சற்று பிசகியிருக்கிறது என்று சொல்லிவிட முடியாதெனலாம்!

தன்னையே நம்பி, தானே இப் பயங்கரப் பாதையில் புகுந்திருந்தாலும், சுயமரியாதைத் தாயாம் 'குடி அரசு' இன்று நாற்பதுக்கும் மேலான மக்களையீன்று அவர்களை தின இதழாகவும், வார இதழ்களாகவும், மாத இதழ்களாகவும் கண்டு கண்டு களிப்பெருவகை கொள்ளும் மகிழ்ச்சிக்கு, எந்தத் தாயினுடைய மகிழ்ச்சியைத்தான் எடுத்துக்காட்டாகச் சொல்ல முடியும்?

கழிந்த 21 ஆண்டுகளாகக் 'குடி அரசு' செய்து வந்த பணிகள் பல! எந்தெந்தக் காரியங்கள் செய்யப்படவேண்டுமென்று 'குடி அரசு' சொல்லி வந்ததோ, வழிகாட்டி வந்ததோ, அவைகளில் சில நாட்டு மக்கள் நடைமுறையிலேயே இன்று வந்து விட்டன! எதிர் முகாம் என்று கருதும் இன்றைய ஆளவந்தார்கள் கூட 'குடி அரசு' கூறி வந்த திட்டங்களைத்தான் சமுதாயத்தைப் பொறுத்த வரையிலும் செய்யவேண்டியவர்களாயிருக்கிறார்கள்! அந்த அளவுக்கு நாட்டு மக்களிடையே நல்ல பக்குவதையுண்டாக்கிப் பண்படுத்தி வைத்திருக்கிறது 'குடி அரசு'! ஈடுபட்ட எந்தப் பணியிலும் வெற்றியே தவிர தோல்வி இல்லை என்ற பெருமை 'குடி அரசு'க்கு உண்டு! இந்நாட்டுப் பொதுவாழ்வில் ஈடுபட்ட எப்பேர்ப்பட்ட விரோதியும் கூட இதை மறுக்க முடியாது!

இவ்வாறு பல திட்டங்கள் வழக்கத்தில் வந்தனவாகவும், வரவேண்டிய நிலையில் உள்ளதாகவும் இருக்கிறது என்று சொல்வது, எடுத்த லட்சியமே நிறைவேறிவிட்டது என்கிற கருத்து அல்ல.

வெற்றி கண்ணுக்குத் தெரிகிறது! கண்ணுக்குத்தெரியும் வெற்றி கானல் நீரல்ல! ஆயினும் ஓரளவு தூரம் இன்னும் போய்த்தான் ஆகவேண்டும்! பல கஷ்டநஷ்டங்கள் பட்டுத்தான் தீரவேண்டும்! ஆனால் இதற்காகச் சளைத்து ஓய்ந்து உட்கார்ந்துவிடவா போகிறது?

மனதில் இரக்கமற்ற மனிதப் பண்பைச் சுட்டுப் பொசுக்கிய, காட்டுமிராண்டித் தனமான பனியாப் பார்ப்பனக் கூட்டாட்சியை எதிர்த்து, அந்தக்கூட்டாட்சிக்குப் பாதந் தாங்கிகளாக, நம்மவர் என்கிற போர்வையைப் போர்த்தியிருப்போர், நம்மீது வீசும் அடக்கு முறைகளுக்கு ஆளாகி வரவேண்டிய இந்த நிலையில் தான்—எப்போதுமே இல்லாத பெரும் ஆபத்துச் சூழ்ந்திருக்கிற இந்த நிலையில்தான்—22-ம் ஆண்டு துவங்கியிருக்கிறது என்ற நினைப்பு 'குடிஅரசு'க்கு உண்டு. அதேபோல ஆபத்தும், நெருக்கடியும் ஆக்கத்தின் விளைவுக்கு அறிகுறி யென்னும் நினைப்பும் அதற்கு உண்டு.

தான் வாழ்வதா—சாவதா என்கிற பிரச்னையை முன்னிறுத்தித் திராவிடன் போர்முனை, பலவற்றில் நின்று போராடி வரும் இந்நாளில் 'குடி அரசு' தன் பணியைத் தீவிரமாகச் செய்துவரும், செய்து வரவேண்டும் என்றுசொல்ல வேண்டிய அவசியமில்லை.

குடி அரசு தோன்ற குடி அரசே நீ வாழ்க! வாழ்க!!

# சென்னைக்கு மகாராஜா கவர்னர்!

—()●()—

## திராவிடரின் அவமானச் சின்னம்!

-(●)-

7—9—48-நாள் மார்வாரி மன்னர், பவநகரின் பார்த்திபன், வடநாட்டின் ஏகாதிபத்தியத்தால் கவர்னராக நியமிக்கப்பட்டு பதவி ஏற்பதைக் கண்டிக்க, திராவிடர்கள் கருப்புக்கொடி காட்ட இருக்கிறார்கள் என்பதையறிந்த போலீசார் 6-உ இரவே பல முக்கியஸ்தர்களுடைய வீடுகளையும் இந்தி எதிர்ப்பு நிலையத்தையும் முற்றுகையிட்டு நிலையத்திலிருந்தவர்களையும் கழக முக்கியஸ்தர்களையும் போலீஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்று காவலில் வைத்தனர்.

அப்படிச் செய்தும் மறுநாள் காலை மகாராஜா கவர்னர் பவனி வரும்போது வழிநெடுக துப்பாக்கியேந்திய போலீஸ் பட்டாளமும், குண்டாந்தடி யேந்திய போலீஸ் படையும் இரு வரிசையில் நின்று அட்டகாசம் செய்தும் திராவிடப் பொதுமக்கள் "இக் கவர்னர் தங்களின் அவமானச் சின்னம்" என்று உணர்ந்து கருப்புக்கொடி காட்டி வெற்றிகரமாய் வெறுப்பைத் தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

பவனி புறப்பட்ட ஸ்பென்ஸர் கம்பெனி எதிரிலிருந்து பவனி முடிவடைந்த ராஜாஜி ஹால் வரை, பல இடங்களிலும் கருப்புக் கொடி காட்டிய தோழர்கள் எல்லாம் கைதுசெய்யப்பட்டனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட 15-தோழர்களையும் போலீசார் அடித்தும், உதைத்தும், உடைகளைக் கிழித்து எறிந்தும், துப்பாக்கியைக்காட்டி பயமுறுத்தவும் செய்தார்களாம். இவர்களுக்கு பகலில் 2-மணிக்கு உணவு கொடுத்து, அன்று இரவுக்கு உணவோ தண்ணீரோ கொடுக்கவில்லை.

மறுநாள் விசாரிக்கப்படும் பொழுது "கூலிக்காகக் கொடி பிடித்தீர்களா?" என்று கேட்டார்களாம் கோர்ட்டார். நல்ல கண்ணியவான்கள்!

ஒரு வாரக் கடுங்காவல்! 25-ரூ அபராதம்! அபராதம் தவறினால் மேலும் ஒருவாரம் கடுங்காவல்! இது தான் தீர்ப்பு!

எவரும் அபராதம் செலுத்தாமல் எல்லோரும் இருவாரக் கடுங்காவல் தண்டனையை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

(4ம் பக்கத் தொடர்ச்சி)

பரந்து சென்றிருந்தது.

அவளுக்கு இருவரை மறக்க முடியவில்லை. அவர்களை நினைக்கும் போதே அவள் நெஞ்சு வெந்து விடும் போலிருந்தது. அவன்கள்தான் என்னைக் கெடுத்தவர்கள். ஆயாளின் கோபத்தை மேலும் கிளறிவிட்டவன்கள் அவன்கள்தான்.

யாரோ இரு தோழர்கள் அலமேலுவின் தனிமைத் தன்மையைக் கேள்வியுற்று, அவளிடம் சென்று கூறினர், அவள் செய்யும் பயனற்ற செயல் வேண்டாமென்று. வற்புறுத்திக் கூறினர் மருத்துவ விடுதியில் சேர்க்கும்படி. அவாகளே முயன்று ஆஸ்பத்திரியில் சேர்த்து விட்டு அலமேலுவுககு ஆறுதலும் கூறிச்சென்றனர்.

ஆனால்; அங்கே நடந்ததெல்லாம் என்ன? மருந்து குலுங்கும் கையில் பணம் குலுங்கும் டாக்டர்கள். அன்பு தவழும் இதயத்துக்கு வெறுப்புக் கொண்ட நர்ஸுகள். தலைவலித்த 'ஸர்' ஒருவருக்கு 4, 5 டாக்டர்கள். நமது திக்கற்ற வேலுசாமிகளுக்கோ, டாக்டர் 'ஜாலி கிளப்'பிற்குச் சென்று திரும்பும்வரை காத்திருக்கும் நிலமை.

தனிமை. யாருக்காக உலகில் வாழ்ந்தாளோ, அவன், முன்னர் பயணம் போகிறான். 12 வயது காளைப் பருவத்திற்கு ஒவ்வொரு நாளும் முன்னேறிக்கொண்டிருக்கும்வயது. அவன் வாழ்வின் கடையோரத்தில் நின்றுகொண்டிருந்தான். அவளுந்தான்.

மூன்றாம் நாள் வரும்வரை அவன் காத்துக்கொண்டிருக்கவில்லை.

'அம்மா, என்மகன்......? அவள் கேட்டாள்.

நர்ஸ் தூரத்தில் சென்றுகொண்டிருந்த ஒரு மூடாக்கு வண்டியைச் சுட்டிக் காட்டினாள். வண்டியோட்டுபவன், பீடிபிடித்துக்கொண்டு தெம்மாங்கு பாடிக்கொண்டு சென்றான். அவனுக்கு செத்தவர்களை புதைப்பது தர்ன் தொழிலாம்.

கட்டிடம் அதிரவில்லை. பூமியில் பூகம்பம் எழவில்லை. அங்கே ஒரு வித மாறுதலும் இல்லை. எங்கும் அமைதி, எப்போதும் போல! அவள் கலங்கிப்போயிருந்தாள். கட்டிடம் இடிந்து தலையில் விழுந்தது போலிருந்தது அவளுக்கு.

அவள் கண்ணீருகுத்தாள்......எல்லாம் பழைய கதையாகிவிட்டது.

புத்தகத்தைத் தோளில் சுமக்கும் வயதுடைய வேலன், இறந்து விட்டான். அவன் இறந்ததைக் கேட்டு நாடு அதிரவில்லை, டாக்டர் முகம் எவ்விதக் குறியும் காட்டவில்லை. அவள் அந்த இரு தோழர்களைச்சபித்தாள்.

அவள் கண்ணீர்உகுத்தாள். வெந்து போன நெஞ்சத்தைப்பிழிந்து வந்தது தண்ணீர்!

[3ம்பக்கத் தொடர்ச்சி]

23 உ காலை யுணவை எங்களில் மிகப்பலர் ருசி கூடப் பார்க்கவில்லையாதலால் அடுத்த உணவு எப்போது என்று கேட்டுத் தெரிந்துகொண்டிருந்தோம்.

பகல் $11\frac{1}{2}$ மணிக்கு உணவு வந்தது. ஒரு இரும்புத்தகடு தைத்த தூக்குப்பலகையில் 86 பட்டைச்சாதங்கள். இதை இரண்டு தண்டனைக் கைதிகள், மேலே ஒரு வெள்ளைத் துணியைப் போர்த்தி எடுத்துக்கொண்டுவந்தார்கள். ஒரு பெரிய இரும்பு வாளியில் அதற்குப் போதுமான சாம்பார். வாளியின் இரு காதுகளிலும் கழியைக்கோத்து இதை இரண்டு தண்டனைக் கைதிகள் தூக்கி வந்தார்கள். இந்த முதல் நாள் சாப்பாட்டு வேளையில் பெரிய அசம்பாவிதம் நடந்து விட்டதை இங்கு குறிப்பிடத்தான் வேண்டும்.

எங்களிலேயே ஒருவர் எழுந்து இரும்புத் தட்டிலிருந்த பட்டை சாதத்தை எடுத்து வைக்க ஆரம்பித்தார். அந்தக்கனவான் பசிதாங்காத சிலரின் வேண்டுகோளுக்கிணங்கிச் சாதத்தை இரண்டு பட்டையாகவும் கொடுக்க ஆரம்பித்துவிட்டார். (அவரும் கூட 2 பட்டைதான எடுத்திருக்கவேண்டுமென்றார்கள்சிலர்.) இதனால் என்ன ஆயிற்று தெரியுமோ? அன்று பகலுக்கு 5 பேருக்குச் சாப்பாடில்லை. அவர்கள் அத்தனை பேரும் எனது ஊர்க்காரரும், பக்கத்துஊர்க்காரர்களுமாய் என்னோடு வந்தவர்கள். மற்ற நண்பர்கள் பட்டினியாய்க் கிடக்க வேண்டும் என்று இந்த 2 பட்டை ஆசாமிகளுக்கு எண்ணமில்லையென்பது என்னமோ உறுதிதான். இவர்கள் நாம் இப்படி எடுத்துக்கொள்வதால் மற்ற சிலபேர் பட்டினியாய்க் கிடக்க நேருமே என்பதைப் பற்றி எண்ணியவர்களே அல்ல. நாம் எடுத்துக் கொள்வதால் ஜெயிலுக்கு நஷ்டமே தவிர நம் நண்பாகளுக்கு நஷ்டமல்ல என்ற தைரியத்தினால்தான் 2 பட்டை ஆசாமிகள் ஆனார்கள் என்று சொன்னால் அது உண்மையும் பொருத்தமுமாயிருக்கும். எப்படியோ அன்று பகல் 5பேர் பட்டினி! அவர்களுடைய பட்டினி அடுத்தாற்போல் ஒரு நண்பருக்கு வெளியிலிருந்து வந்த பழத்தாலும் ரொட்டியாலும ஓரளவு குறைக்கப்பட்டதென்றாலும் இந்தச்சம்பவம் எல்லோருக்கும் நல்ல எச்சரிக்கையாகவே முடிந்தது. அதன் பிறகு பட்டை குறைவதே இல்லை.

இந்தஉணவைத்தொடர்ந்துஉடனே மோர் கொடுக்கப்பட்டது. இதன் பிறகு உப்பில்லாமல் வெந்த வேர்க்கடலை ஒரு பிடியும், வெல்லக்கட்டி ஒவ்வொரு துண்டும் கொடுக்கப்பட்டது;

மாலை $4\frac{1}{2}$ மணிக்கு மீண்டும் உணவு, அதே பட்டைச்சாதம்; அதே சாம்பார். ஆனால் உருளைக் கிழங்கு கறி உபரி, இந்த உருளைக்கிழங்குக் கறி எல்லா நாளுமே மாலையில் தரப் படுகிறது.

புதன் கிழமையிலும், சனிக்கிழமையிலும் காலைச் சோளக்கஞ்சியுடன் உப்பில்லாமல் வேகவைக்கப்பட்ட துவரை ஒவ்வொரு கைப்பிடி தரப்படுகிறது. இதற்குப்பதிலாக அன்றைய சாம்பாரில் பருப்புக் குறைந்து விடுகிறது.

சாம்பாரில் வாழைக்காய், வெண்டிக்காய், கத்திரிக்காய், சேனைக் கிழங்கு முருங்கைக்காய், கொத்தவரங்காய், என்பது போல் 5, 6 காய்கள் இருந்தாலும், எல்லா நாளுமே கீரைத்தண்டு மட்டும் இல்லாமல் இருக்காது.

இவை தான் (சி) வகுப்பு உணவு விசேஷங்கள்- சாதாரணமாகக் கஞ்சியை நாங்கள் வெறுத்தாலும் இந்த உணவு போதுமானது என்றே நாங்கள்திருப்தி பட்டோம். எங்களில் சிலர் கடைசிவரை கஞ்சியைக் குடியாமல் ஒவ்வொரு நாளும் $11\frac{1}{2}$ மணிவரை காத்திருந்து, சாதத்தைத்தான் சாப்பிட்டார்கள் என்பதையும் இங்கு குறிப்பிடவேண்டும்.

சென்னை ஜெயிலிலுள்ள தண்ணீரைநினைக்கிறபோது, சோளக்கஞ்சி எத்தனையோ நூறு மடங்கு நல்லது என்பது என்னுடைய அபிப்பிராயம். அந்தத் தண்ணீரிலே அழுகி, நைந்த, பழுத்த இலைகள் கட்டி கட்டியாய் வந்து விழுவதை நான் குறிப்பிடவில்லை, அதிலே சிறு சிறு மீன் குஞ்சுகள் வந்து விழுவதை நான் குறிப்பிடவில்லை. அவைகளைக் காணும்போது வேண்டாமென்றால் கீழே கொட்டிவிடலாம். ஆனால் அத்தண்ணீரைக் குழாயிலிருந்து பிடித்தவுடன் வாய்க்கு அருகாமையில் கொண்டு போனால் உடனே கூவம் வாசனை மூக்கைத் துளைப்பதை எப்படிக் குறிப்பிடாமல் இருக்க முடியும்?

இதைத்தான் மறுநாள் எங்களைக் காண்பதற்கு வந்த காங்கரஸ் தோழர் ராஜமன்னார் எம். எல். ஏ. யிடம் வற்புறுத்திக் கூறினோம். அந்தத் தண்ணீரைக் குடித்துப் பாருங்கள் என்று அவருக்குக் கொஞ்சம் தண்ணீரும் கொடுத்தோம். அவரும் குடித்தார். இந்தத் தண்ணீரில் ஏதாவது மாறுதலை உண்டாக்கி, அருவை இல்லாமல் குடிப்பதற்கேற்ற வகையில் எப்படியாவது விரைவில் செய்யப்பட வேண்டும் என்பதையும், உணவிலும் சிறந்த தண்ணீரை உண்டதற்கு லாயக்கற்ற முறையில் வழங்குவது அரசாங்கத்திற்குப் பெரும் பழி என்பதையும், இதை நீண்டகாலம் பருகவேண்டிய கைதிகளுக்கு உடல் நிலை மட்டுமல்லாமல் உள்ளமும் பாதிக்கப்பட்டால்

அது ஆச்சரியமல்ல வென்பதையும் அவருக்கு உணர்த்தினோம். அவர் யாது செய்வாரோ? என்ன செய்தாரோ?

23உ மாலையில் நாங்கள் சாப்பிட்டுக்கொண்டிருக்கும் போது சில கருவிகளைத் தூக்கிக்கொண்டு இரண்டு தண்டனைக் கைதிகள் பின்தொடர டாக்டர் அங்கு வந்தார். இரண்டு நாள் சரியாகச் சாப்பிடாமலிருந்த நிலையில், எங்களுடைய எடையும், உயரமும் கணக்கிடப்பட்டு எங்களிடமே ஒவ்வொரு தாளில் அவரால் குறித்துத்தரப்பட்டது.

இதன்பின் எங்களில் சிலருக்கு, 13 பேருக்கு பி. வகுப்பாக மாற்றப்பட்டிருக்கிறது என்கிற உத்தரவை 8 பேருக்கு ஒரு தடவையும் 5-பேருக்கு ஒரு தடவையுமாக இரண்டு முறை அறிவிக்கப்பட்டு, அந்தப்பதின்மூன்று பேரும் சென்றுவிட பாக்கி 73 பேரும் மிக உற்சாகத்தோடு ஒவ்வொரு கொட்டடியிலும் மூவராகவும், நால்வராகவும் உள் புகுந்தோம். 'லாக்கப்' 'லாக்கப்' என்ற சத்தம்! கதவுகள் பூட்டப்பட்டன! மணி ஆறு!

காலை ஆறு மணிக்குக் கதவு திறப்பது! மாலை ஆறு மணிக்குப்பூட்டுவது! என்கிற சட்டமாயிருந்தாலும், கதவு திறக்க 6½ மணி ஆவதும், பூட்டுவதற்கு 5½ மணிக்கே ஆரம்பித்துவிடுவதும் நடைமுறையில் இருக்கிறது. ஆக ஒரு நாளில் 13 மணி நேரம் கொட்டடி வாசம்!

மறுநாள் 24உ. காலை 9 மணியைப் போல் டாக்டர் நாங்கள் இருக்குமிடம் வந்து எங்கள் முக அடையாளங்களைப் பதிவு செய்துகொண்டார். இந்தப் பதிவு செய்யும் புத்தகத்தில் நாங்கள் ஏற்கனவே போலீஸ் கமிஷனர் ஆபீசில் கொடுத்தபடி பெயரும் தொழிலும் குறிப்பிடப்பட்டிருந்தாலும் இந்து-முஸ்லிம் என்கிற தலைப்பில் மதம் பிரித்தும் எழுதப்பட்டிருந்தது. இதைப் பாராமலே முக அடையாளங்காட்டி எழுதிக்கொள்ளப் பலர் இடங்கொடுத்திருந்தாலும், இதைக் கவனித்த திருச்சித்தோழர் ஒருவர், எங்களை 'இந்து' என்று குறிப்பிடக்கூடாதென்றும், திராவிடன் என்றே குறிப்பிட வேண்டுமென்றும், அவ்வாறு திருத்தாவிட்டால் நாங்கள் மனமொப்பி முக அடையாளம் தரமாட்டோம் என்றும் விளக்கமாகக்கூறி வற்புறுத்தினார். இதையறிந்த எஞ்சிய தோழர்கள் எல்லாம் அதை வற்புறுத்தி ஆமோதித்தார்கள். உடனே டாக்டர் தந்திரமாக ஒரு வழியைக் கையாண்டார். நான் உங்கள் தலைவரை இங்கே அழைத்து வருகிறேன் என்றும், அவர் கூறினால் ஒத்துக்கொள்வீர்களல்லவா என்றும் கேட்கவே எல்லோரும் சரி என்றனர்.

சிறிது நேரம் கழித்துப் புன்னகை தவழ பெரியாரவர்கள் நாங்கள் இருக்குமிடம் வந்தார்கள். நாம் இங்குள்ள ஜெயில் அதிகாரி எவரிடமும் வெறுப்பைக் காட்டாமல் நடந்து கொள்ள வேண்டும் என்றும், 'இந்து' என்று அவர்களாகவே எழுதிக்கொண்டிருக்கிறார்களே தவிர நாம் அதில் கையெழுத்துப் போடப்போவதில்லையென்றும், இப்பொழுது 'இந்து' என்று குறிப்பிடாமல் நம் முன் எழுத வேண்டியதை யெல்லாம் எழுதிக்கொண்டு, பின் இந்து என்று அவர்கள் அதில் எழுதுவார்களானால் நாம் என்ன செய்யமுடியும் என்றும், நமது லட்சியத்திற்கு மாறாக இப்படித்தான் நாங்கள் எழுதுவோம் என்று அவர்கள் எழுதியனுப்பியிருக்கும்போது அவர்களுக்குள்ள அந்த உரிமையைத்தான் நாம் ஏன் ஆட்சேபிக்க வேண்டும் என்றும் கேட்டு, இந்தச் சிறு விஷயத்துக்குச்சச்சரவின்றி நீங்கள்எல்லாம் இங்கு டாக்டர் சொல்லுகிறபடி நடந்து கொள்வது நல்லது என்று குறிப்பிட்டார்கள். மேலும் பி. சி. என்ற பிரிவுகளை, ஜெயில் வர்ணாச்சிரம முறையைக் கூறி, எல்லோரையும் ஒரு வகுப்பில் வைக்கப்பட வேண்டியது தான் நியாயம் என்று அதிகாரிகளுக்கு நான் இதை எடுத்துக்காட்டினேன் என்றாலும், அவர்கள் அதை ஒப்புக்கொள்ளாமல் சிலரைப் பொறுக்கியனுப்பும்படி சொல்லிவிட்டார்கள். நான் குறித்தனுப்பிய 25-பேர்களில் 13-பேர்கள் தான் இப்போது பி. வகுப்புக்கு மாற்றப்பட்டிருக்கின்றார்கள். இது அநியாயம்! அக்கிரமம்! ஆனால் நாம் என்னசெய்ய முடியும்? முறைப்படி தண்டனை பெற்று நாம் இங்கு வந்திருந்தால் உங்களில் மிகப் பலர் பி வகுப்பில் இருப்பீர்கள் என நான் அறிவேன். நீங்கள் எல்லோரும் இதைப் பாலபாடமாகக் கருதிக் கஷ்டங்களைப் பொறுத்துக்கொள்ள வேண்டியது தான். அங்கும் அப்படி ஒன்றும் வசதியாயில்லை. சுவரில் சாயாதே! சாய்ந்தால் சிரங்கு உண்டாகும் என்று ஒரு பக்கம் பயமுறுத்துகிறார்கள்! கொசுக்கடி உபத்திரவமோ பொறுக்க முடியவில்லை! பி வகுப்புக்கு வந்த ஒருவர், சி வகுப்பில் இவ்வளவு கஷ்டமில்லையே என்றார். எப்படியிருந்தாலும் நீங்கள் பொறுமையுடன் நடந்து கொள்ளவேண்டும்! இங்கு இருக்கும் அதிகாரிகளுக்கு எந்தவிதமான தொந்தரவும் கொடுக்காதீர்கள்! என்று கூறி முடித்தார்கள்.

பெரியாரவர்கள் சென்ற பிறகு தடங்கலின்றி டாக்டர் அய்யரின் வேலை சுமுகமாக நடந்தன.

24 உ முதல் எங்களுக்கு வெளியிலிருந்து சாத்துக்கொடியும் வாழைப்பழங்களும் 200, 500 என்கிற கணக்கில் வர ஆரம்பித்தது. அதைப் போலவே புகைவர்க்கமும் வந்தது. ஒரு நாள் ஒரு மிட்டாய் டின்கூட வந்தது. இவைகள் எல்லாம் விடுதலை, நிலையத்திலிருந்து ஜெயிலர் வழியாக அனுப்பப் பட்டன என அறிந்தோம். எங்களில் சென்னை நண்பர்கள் இரண்டொருவருக்குத் தனிப்பட்ட முறையிலும், பழங்களும் மற்றப் பொருள்களும் வந்தன. ஆனால் அவைகளும் பொதுவுடைமைதான்! அவர்களும் தான் தனியாய் வைத்துக்கொள்ள எப்படி மனந்துணிவார்கள்!

எங்கள் பொழுது போக்கைப் பற்றி இனிக் குறிப்பிடுகிறேன். பொழுது போவது அப்படி ஒன்றும் கஸ்டமாயில்லை. எந்த விதமான வேலையுமில்லாமல் நல்ல உடல் நிலையோடு வெறுமனே இருக்கவேண்டிய நிலையிருக்கிறதே அது பெரிதும் சங்கடமான நிலையென்றாலும், எங்களில் சில பேர் அங்குள்ள சிற்சில தொழிற்சாலைகளைக், குறிப்பாக நாங்கள் இருந்த பகுதியில் உள்ள காகிதத் தொழிற்சாலையை நுணுக்கமாகக் கண்ணுற்று வருவதில் ஈடுபட்டனர். அங்குள்ள அடுப்பில் குடிப்பதற்குத் தண்ணீர் காயவைப்பதிலேயே சிலர் ஈடுபட்டனர். (தண்ணீர் சூடேற்றப் பெற்றால் நாற்றம் கொஞ்சம் குறையும்) அங்குள்ள நூல் நிலையம் சென்று புத்தகங்களை எடுத்து வந்து படிப்பதில் சிலர் ஈடுபட்டனர். தாயம் ஆடுவதில் சிலர் ஈடுபட்டனர். சிலர் அங்கேயே தயாரிக்கப்பட்ட சீட்டுக் கட்டினால், மிகத் திறமையாகச் சீட்டாட்டம் ஆடவும் செய்தார்களாம். 73 பேர் ஒன்றாய் இருக்கும் போது பொழுது கழிவது என்ன கஸ்டமாகவா இருந்து விடும்?

சிறையுலக நாணயத்தைப்பற்றியும் கூறவேண்டும். பெண்ணைத் தவிர வேறு எந்தப்பொருளையும் சிறைக்குள்ளும் அநுபவிக்கலாம் என்கிறார்கள் சிறை சென்ற அனுபவஸ்தர்கள். 42 ஆகஸ்டில் அதுகூட விதிவிலக்கு இல்லை என்பதாகக் கேள்வி. அது எப்படியிருந்தாலும் சிறைக்குள்ளிருக்கும் எந்த உணவுப் பொருளையும் 'பீடி'யைக் கொடுத்து வாங்கிக்கொள்ளலாம் என்று அங்கிருந்த கைதிகள் கூறினார்களே அது நூற்றுக்கு நூறு உண்மை என்றுதான் ஒப்புக்கொள்ள வேண்டியிருக்கிறது. ஆனால் எங்களில் யாருக்கும் அப்படி ஒரு தேவை ஏற்பட்டு அநுபவம் உண்டாகவில்லையென்றாலும், வெளியிலுள்ள ரூபாயணா மதிப்புக்கும், ஜெயிலில் பீடியின் மதிப்புக்கும் வித்தியாசமில்லை என்று தெரிந்து கொள்ளத் தவறவில்லை.

இப்படி உல்லாஸமாகவே கவலையற்றுத் தோழர்கள் எல்லோரும் விளங்கினார்கள் என்றாலும் 27ம் தேதியே விடுதலை செய்துவிடப்படுவோம் என யாரும் எதிர்பார்க்கவேயில்லை. 24ம் நாள் எங்களுக்குப் புதுத்தட்டும் புதுக்குவளையும் மாற்றப்பட்டன. இது பலருக்குச் சந்தேகத்தை உண்டாக்கி

யது. சமீபத்தில் நாம் விடுதலை செய்யப்படுவோமென்றால் இந்த மாற்றம் அவசியமில்லையே என்பது தான் அந்தச் சந்தேகம். இந்தத்தட்டு மாற்றத்தோடு வெளியில் நடந்தேறிய பலாத்காரச் சம்பவங்களைக் கேள்விப்பட்டபோது நிச்சயமாக 30௳ கூட விடுதலையாகமாட்டோம் என்றேஎண்ணினோம், பேசினோம்.

எதிர்பாராத நிலையில் நாங்கள் எப்படிக் கைதாக்கப்பட்டோமோ, அதே மாதிரி சற்றும் எதிர்பாராத நிலையில் தான் 27௳ காலை 10 மணியளவில் 'ரிலீஸ்' 'ரிலீஸ்' என்ற சத்தத்தைக் கேட்டோம். இதைக் கேட்டவுடன் உண்மையாகவே என்னால் நம்ப முடியவில்லை. பலருடைய மன நிலையும் அப்படித்தான் இருந்திருக்க முடியும். வார்டர் வந்து சொல்லியபிறகு தான் சந்தேகம் தெளிந்தது.

11 மணிக்கு பகலுணவில்லாமல் நாங்கள் எல்லோரும் பெரியார் உள்பட ஜெயில் வாசலுக்கு வந்துவிட்டோமென்றாலும் சுமார் 1 மணிக்குத்தான் நாங்கள் வெளியேற முடிந்தது. அந்த 2 மணி நேரமும் கொடுத்திருந்த சாமான்களைத் திரும்பப் பெறுவதில் கழிந்தது.

இப்படியாக என்றைக்கும் மறக்க முடியாத சோளக் கஞ்சியோடு, நாங்கள் சிறைவாழ்விலிருந்து விடைபெற்றவர்களானோம். இது தான் நாங்கள் சிறையிலுண்ட கடைசி உணவு. இதை எண்ணும் போது இப்போதையச் சென்னை மந்திரிகளில் பலருடைய சொந்தயோக்கியத்தைக்கும், சொந்த வாழ்வுக்கும் மேலான யோக்கியதையுடன் மேலான வாழ்வில் வாழும் பலர்—புழுத்த சோளக்கஞ்சியுடன் விடைபெற்றதை எப்படி மறந்துவிடமுடியும்.

எங்கள் சிறைவாழ்வில் குறிப்பிட வேண்டிய பல அம்சங்களையும் இங்கு குறிப்பிட்டிருக்கின்றேன். குறிப்பிடாதவையும் சில இருக்கலாம். இங்கு இவைகளைக் குறிப்பிட்டதின் நோக்கம், நாங்கள் நிரம்பக் கஷ்டப்பட்டுவிட்டோம் என்பதைக் காட்டுவது அல்ல. திராவிட இனத்தினர் பலர் இன்று சிறையைப்பற்றித் தெரிந்துகொள்வதில் அக்கரையுடையவர்களாயிருக்கிறார்கள் என்பதினால்தான் எதையும் கூட்டாமல், குறைக்காமல் பெரும்பாலும் நான் எனது பாலபாடத்தில் கண்ட அநுபவங்களை இங்கு தந்திருக்கின்றேன். சிறை செல்ல வேண்டுமென்ற துடிப்போடு, இது வரை சிறைசெல்லாத தோழர்களுக்கு இது ஒரு அளவு வழிகாட்டுவதாய் இருந்தால் அது போதும். அதுதான் நான் இதை எழுதியதன் நோக்கம்.

## எழுச்சிக் கதிர்கள்.

-([illegible])-

இங்குள்ள திராவிட போலீஸ்காரர்களைக் கூட நம்பமாட்டார்கள். மலையாளத்திலிருந்தோ, கூர்ஜரத்திலிருந்தோ பட்டாளத்தைத் தருவித்து வந்து நம்மீது ஏவிவிடுவார்கள். ஏற்கனவேகூட ஒரு 2000-பேரைச்சென்னைக்குத் தருவித்து வைத்திருப்பதாகத் தெரிகிறது. இந்த பயங்கர நிலைமையில் தான் ஹிந்தி எதிர்ப்பு நடைபெறவேண்டும்.

பெரியார்.

தமிழர்கள் வம்புச் சண்டையில் ஈடுபடுபவர்கள் அல்ல. ஆனால், வந்த சண்டையை விடாதவர்கள். ஆட்சியாளரின் ஆணவத்திற்கு அடிபணிவதும் அருமைத் தமிழினத்தவரின் பண்பல்ல. எனவே, அறப்போர் தொடுக்கத் தீர்மானிப்போம். அப்போரில் வெற்றி காண இங்கு கூடியுள்ள நமது பெரும் பெரும் தலைவர்களின் ஆசியை முதலில் பெறுவோம்.

சி. என். ஏ.

வட நாட்டுக்கும் நமக்கும் அரசியல் தொடர்புமில்லை. மொழித் தொடர்புமில்லை. கலாச்சாரத் தொடர்புமில்லை. ஆகவே அந்த நாட்டு மொழியை இந்த நாட்டில் கொண்டுவந்து புகுத்துவது தவறானது, பயனற்றதுங் கூட. இதில் யாருக்கும் கட்சி பேதம் காரணமாகவோ, ஜாதி பேதம் காரணமாகவோ அபிப்பிராய பேதம் இருக்க நியாயமில்லை.

அருள் தங்கையா.

களையை நாங்கள் எவ்வகையினும் பிடுங்கித்தான் தீருவோம்! செழுந்தமிழ்ப் பயிரிடை, களையென முளைத்து நிற்கும் இக் கட்டாய இந்தியை ஒழித்தே தீருவோம் என்று முடிவு செய்யவே, அதற்கான வழி வகுக்கவே நாம் இங்குக் கூடியுள்ளோம்.

ம. போ. சி.

ஒரு நாட்டில் ஒரு மொழி தேசிய மொழியாக்கப்பட வேண்டுமானால் அம்மொழியில் ஏனைய

# குடி அரசு

## சிறு கதைப் போட்டி.

| | |
|---|---|
| 1. தீர்ப்பளியுங்கள்! | |
| 2. கைதியின் கதை. | |
| 3. குற்றவாளி யார்? | |
| 4. நல்ல தீர்ப்பு! | |
| 5. சேற்றில் முளைத்த தாமரை. | |
| 6. மலர்ந்த மலர்! | |
| 7. பள்ளியறையில் முதல் நாள். | |
| 8. வென்ற இலட்சியம்! | |
| 9 யாருக்காக வாழ்ந்தான்? | |
| 10. இலட்சிய வாதி. | |
| 11. அவனிட்ட விதைகள்! | |
| 12. என் குற்றமா? | |
| 13. வெந்த உள்ளம்! | |

× அடையாளமிட்டவரின் சிறு கதையைப் பரிசுக்குரியதென நான் தேர்ந்தெடுக்கிறேன்.

பெயர்..................................

தெரு..................................

............1948. ஊர்..................................

..................................

ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

மொழிகளைக் காட்டிலும் அதிகக் கலைகள் அதிகப் பண்புகள் அதிகக் காவியங்கள் இருக்கவேண்டும். ஆராய்ச்சியாளர்களை, பேரறிஞர்களை அம்மொழி ஈன்றிருக்க வேண்டும். அப்போதுதான் அது தேசிய மொழியாக்கப்பட வேண்டும்.

திரு. வி. க.

ஆரியர்கள் இந்நாட்டில் புகுந்தது முதல் நமக்கு இழைத்து வரும் தீங்கு சொல்லத்தரமன்று! சாதியைப் புகுத்தியவர்கள் இவர்கள் தான். நமக்குள் மத வேற்றுமையைப் புகுத்தியவர்கள் இவர்கள் தான். இந்நாட்டில் மோட்சத்தையும், நரகத்தையும், உயர்வையும் தாழ்வையும் உண்டாக்கியவர்களும் இவர்கள்தான். எனவே, இச்சூழ்ச்சிக்காரக் கும்பலின் சதிச்செயலுக்கு நாம் பணிந்து விடக்கூடாது கடைசி மூச்சுவரை போரிட்டேனும் சாக வேண்டியது தான். போராடி வெற்றி காண்போம். ஹிந்தியை ஒழிப்போம்.

வி. பி. எஸ். மணியர்.




# வேண்டுகோள் !

[★]

தோழியர்களே! தோழர்களே!

இந்த இதழில் வெளிவந்திருக்கும் சிறுகதையோடு, முதற்பருவத்திற்குரிய 13 கதைகளும் வெளிவந்து விட்டன. இவற்றுள் எந்த எண்ணில் (நம்பரில்) வந்த சிறுகதை பரிசுக்குரியது என்பதைத் தேர்ந்தெடுக்கும் உரிமை வாசக வாக்காளர்களைச் சேர்ந்தது. இதை முன்பு அறிவித்திருந்ததற் கேற்ப, உங்கள் வாக்குகளைப் பெற இதன் உட்புறத்தில் ஒரு வாக்குரிமைச் சீட்டு (பாலெட் பேப்பர்) அமைக்கப்பட்டிருக்கிறது.

வாக்குரிமையைப் பயன்படுத்தியே ஆகவேண்டும் என்கிற பொறுப்பையுணர்ந்த நீங்கள், இதனால் ஏற்படும் சிறு தொந்தரவை எண்ணாமல், எந்த எண்ணுக்குப் பரிசு கொடுக்கலாமென்று கருதுகிறீர்களோ அந்த எண்ணுக்கு முன்னால் X அடையாளமிட்டு, கையெழுத்தோடு முகவரியும் குறிப்பிட்டுக், கத்திரித்துக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டுகிறோம்.

ஒவ்வொரு ஊரிலுள்ளவர்கள் ஒன்றாகக் கூடியோ அல்லது அந்தந்த ஊர் குடி அரசு ஏஜண்டிடம் கொடுத்தோ, மொத்தமாகச் சேர்த்தும் வாக்குச் சீட்டுகளை அனுப்பலாம்.

வாக்குரிமைச் சீட்டு, வந்து சேரவேண்டிய கடைசி நாள் 25—9—48.

இப்புது முயற்சி வெற்றிபெற நம் வாசகத் தோழர்களும், ஏஜண்ட் தோழர்களும் தயவு செய்து ஒத்துழைக்க வேண்டுமெனப் பணிவுடன் கேட்டுக்கொள்ளுகிறோம்.

ஆசிரியர், "குடி அரசு", ஈரோடு.

## குடி அரசுப்பதிப்பக வெளியீடுகள்.

★

| | | | |
|---|---|---|---|
| தத்துவவிளக்கம் | 0 | 12 | 0 |
| புது ரஷ்யா | 0 | 8 | 0 |
| இந்தியாவின் குறைபாடுகள் | 0 | 8 | 0 |
| பெரியார் ஈ. வெ. ரா. வாழ்க்கை வரலாறு. (ஆங்கிலம்) | 0 | 8 | 0 |
| நமக்கு வேண்டியது எது? சமதர்ம ராஜ்யமா? சுயராஜ்யமா? | 0 | 6 | 0 |
| கர்ப்ப ஆட்சி | 0 | 6 | 0 |
| பெரியார்பெருந்தொண்டு | 0 | 6 | 0 |
| வெளியேறு | 0 | 6 | 0 |
| பகுத்தறிவு அல்லது மரணசாஸனம்2ம்பாகம் | 0 | 4 | 0 |
| பொதுவுடைமைத் தத்துவங்கள் | 0 | 4 | 0 |
| புராண ஆபாசங்கள் (தருமபரீட்சை) | 0 | 4 | 0 |
| மதப்புரட்சி | 0 | 4 | 0 |
| வால்டையரின் வாழ்க்கைச் சரிதை | 0 | 4 | 0 |
| கார்ல் மார்க்ஸ் | 0 | 4 | 0 |
| சமதர்ம உபன்யாசம் | 0 | 4 | 0 |
| அப்பரும் திருஞான சம்பந்தரும் | 0 | 3 | 0 |
| சோஷியலிசம் | 0 | 3 | 0 |
| இலங்கை உபன்யாசம் | 0 | 3 | 0 |
| இராமாயணப் பாத்திரங்கள் | 0 | 3 | 0 |
| மேல்நாடும், கீழ்நாடும் | 0 | 3 | 0 |
| உழைப்பாளிக்கு ஏன் இவ்வுலகம் இல்லை? | 0 | 3 | 0 |
| இன இழிவு ஒழிய இஸ்லாமே நன் மருந்து! | 0 | 2 | 0 |
| இதிகாசங்கள் புகட்டும் நீதி | 0 | 2 | 0 |
| உண்மைத் தொழிலாளி யார்? | 0 | 2 | 0 |
| திருச்சிப் பிரசங்கம் | 0 | 2 | 0 |
| ராமலிங்க சுவாமி பாடல் | 0 | 2 | 0 |
| தமிழ் இசை-நடிப்புக் கலைகள் | 0 | 1 | 0 |

கிடைக்குமிடம்:-

நாதன் கம்பெனி லிமிடெட்,

கச்சேரி வீதி, ஈரோடு.

Edited, Printed and Published by N. Karivaradaswamy at the Tamilian Press 42, Cutcherystreet, ERODE